www.tamilarangam.net

# சுதந்திரதாகம்



சர்வதேசமும்
தமிழீழத்தேசமும்



இந்தியாவை
வெற்றிகொள்வது
சாத்தியமா?



தமிழீழம்—ஸ்ரீலங்கா
இராணுவச்சமநிலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரதாகம்

## 03.04.'92 வெள்ளி மாலை 7 மணி

இடம்: Studentsenteret
Parkveien 1
Universitetet i Bergen

## நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| இது எங்கள் தேசம் | — சிறுவர் நடனம் |
| இழந்த மண்ணும் எங்கள் வாழ்வும் | — மேடைநிகழ்வு |
| அடிமை விலங்கொடித்து | — நடனம் |
| கிராமிய எழுச்சிப்பாடல்கள் | |
| யாமார்க்கும் குடியல்லோம் | — நாட்டிய நிகழ்வு |
| எமக்காய் எழும் தேசம் | — நாடகம் |

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு
பேர்கன், நோர்வே

தமிழீழ விடுதலைப்புலிகள்
நோர்வேக்கிளை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேரினவாதமும் பல்லின சமூகமும்

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்த சிங்கள பௌத்த பேரினவாதம் பெரும் முயற்சிகளை எடுத்து வருகின்றது.

இராணுவரீதியில் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்வதன் மூலம் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை ஒடுக்குதல் நடைமுறைச் சாத்தியமற்ற தென்பதை புரிந்து கொண்ட சிங்களப் பேரினவாதிகள் தமிழீழத்திற்கான அடிப்படைகளை மழுங்கடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இதன் ஒரம்சமாக தமிழ்த் தேசிய இனத்தினை ஒரு சிறுபான்மை இனக்குழுவாக குறுக்கி இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல்அமைப்பினை நிலை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.



இலங்கைத்தீவு சிங்கள,தமிழ் தேசங்களைக் கொண்ட ஒருநாடாக தற்போது உள்ளது என்பதற்கு பதிலாக பல்லினங்களைக் கொண்ட நாடு என சர்வதேச அரங்கில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கையின் இனப்பிரச்சினையினை தேசிய இனப்பிரச்சினை எனும் அந்தஸ்துக்கு உயர விடாது தடுத்தல், சுயநிர்ணய உரிமையின் பிரயோகத்தினைத் தடுத்தல் ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்ள சிங்களப் பேரினவாதம் முயல்கின்றது.

இதேவேளை தம்மை முற்போக்காளர்களாகக் காட்டிக் கொள்ளும் சிலரும் இலங்கைத்தீவு பல்லின மக்கள் கூட்டத்தினைக் கொண்டுள்ளது என்ற கருத்தினை முன் வைத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இலங்கைத்தீவில் பௌத்த சிங்கள பேரினவாதம் நிறுவனமயப்படுத் தப்பட்டு முதன்மை நிலையில் இருப்பதாகவும் அது பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்வதில்லை எனவும் பல்லினத்தன்மையினை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் போதே இலங்கைத்தீவில் அமைதி நிலவும் என்ற வாதத்தினை இவர்கள் முன் வைக்கின்றனர்.

இவர்களின் இக் கருத்துப்படி சிங்கள, தமிழ் தேசிய இனங்களுக்குப் பதிலாக சிங்களம், தமிழ் உள்ளிட்ட பல்லினங்களை இலங்கைத்தீவு கொண்டுள்ளது.தமது இக் கருத்துக்கு சர்வதேசரீதியில் ஆதரவு தேடும் பணியிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இக் கருத்து தமிழ்த் தேசிய இனத்தினைப் பொறுத்தவரை ஆபத்தானது.பௌத்த சிங்கள பேரினவாதம் தமிழ்த் தேசிய இனத்தினை அங்கீகரிக்கும் வரைக்கும் இன முரண்பாடு தீரப்போவதில்லை எனும் உண்மையினை வலியுறுத்துவதற்கு மாறாக பல்லின சமுதாயம் பற்றிப் பேசும் இவர்கள் உண்மையில் சிங்கள பேரினவாதத்திற்குத் துணைபோகின்றனர்.

இந்நிலையில், சர்வதேசரீதியாக தமிழ்த் தேசிய இனத்தின் தேசியத் தகமைகளை உறுதியாக நிலைநிறுத்த வேண்டிய கடமை அனைத்துத் தமிழ் மக்கள் முன்னாலும் உள்ளது.

தமிழ்த் தேசிய இனத்தினை சிறுபான்மை இனக்குழுவாகக் குறுக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை தடுத்து நிறுத்தவும், எமது சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்குமாறு உலக நாடுகளைத் தூண்டவும் நாம் எமது அனைத்து வளங்களையும் பயன்படுத்தியே ஆக வேண்டும்.

**சருகு விழும்**

**உக்கும்**

**மரத்திற்கே உரமாகும்**

**மீண்டும் துளிர்விடும்**

**மண்ணை நேசிப்பவர்களின்**

**மரணம்**

**இன்னொரு ஜனனம்!**

www.tamilarangam.net





# சர்வதேசமும் தமிழீழத்தேசமும்

சர்வதேச அரசியல் அரங்கில் நடைபெறும் மாற்றங்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உரம் சேர்ப்பனவாக உள்ளன. தமிழீழ விடுதலைப்போராட்டமும், தனது இலக்கை நோக்கி மிக வேகமாக நடைபோட்டுவருகின்றது. வட தமிழீழத்தையும், தென் தமிழீழத்தின் பெரும் பகுதியையும் தனது கட்டுப்பாட்டுக்குள் நெடுங்காலம் வைத்திருப்பது என்பது நாட்டுருவாக்கத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். அப்பகுதிகளைத் தொடர்ந்து இராணுவரீதியில்,

## லோரன்ஸ் திலகர்

மீள் ஆக்கிரமிப்பில் இருந்து காப்பாற்றி வருவதோடு, அங்கு, மக்களின் சமுக, பொருளாதார நலன்களைப் பேணும் பொருட்டு அதற்குரிய அரசியல், சமுக, நீதித்துறை, பொருளாதார கட்டுமானங்களை எழுப்பி வருவது புதிய நாடொன்றைப் படைக்கும் முயற்சியில் இன்னுமொரு படியாகும். தமிழீழத்தேசத்தின் பாதுகாப்பு என்ற விடயத்தில், தமிழீழத் தேசிய இராணுவம் அமைந்துள்ளது. மிகச் சிறந்த கொரில்லா இராணுவம் என்ற சர்வதேச புகழ் பெற்றுள்ளதோடு, முறையான மரபுப்படையாகவும் மாறி வருகின்றது.

பல்லாயிரக்கணக்கான ஆண், பெண் போராளிகளைக்கொண்ட இம் மக்கள் இராணுவத்தில் பல விசேட படையணிகள் காணப்படுகின்றன. கரும்புலிகள், கடற்புலிகள் மாத்திரமல்ல, அதி வேக அதிரடிப் படைகளும் உருவாக்கம் பெற்றுள்ளன. அவை தவிர, பொதுமக்களுக்குப் பயிற்சி அளித்து உருவான எல்லைப்புற காவற்படைகளும், துணைப்படைகளும் தமிழீழ கடல், தரை எல்லைகளையும், பரந்த நிலப்பகுதிகளையும் பாதுகாத்து வருகின்றன. போர் வடிவங்களும், ஆயுதங்களும் அரை மரபு ரீதியான போர் முறைக்கு ஏற்றதான முறையில் மாற்றமடைந்து வருகின்றன.

போர் முடிவுறும் வரை கொரில்லாப் போர் முறையும், அவ்வகைத் தாக்குதல்களும் எபபோதும் தொடர்ந்து இருந்தே வரும். பொருளாதாரத்தடையை உடைப்பதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் சுயசார்பு உற்பத்தியில், விவசாயம், மீன்பிடி, பனந்தொழில் ஆகிய சகல விடயங்களிலும் ஆற்றும் செயற்பாடும், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அகதிகளுக்கு ஆற்றும் அளப்பறிய சேவையும் குறிப்பிடத்தக்கன. விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் பல்வேறு இலக்கிய அறிவியல் நூல்களை வெளியிடுவதோடு, இலக்கிய ஆக்க முயற்சிகள் தொடர்பாக பயிற்சிப்பட்டறைகளையும் நடாத்தி வருகின்றது. சட்டம், ஒழுங்கைப் பேணவும், மனித உரிமை மீறல்கள் நடைபெறாது தடுக்கவும் உருவாக்கப்பட்டுள்ள நீதித்துறை, காவல்துறை கட்டுமானங்கள் புதிய அரசின் உதயத்தில் இன்னொரு பாிமாணமாகக் கருதப்படுகின்றது. காவல் நிலையங்கள் சர்வதேச சட்டவரம்புக்குள் உட்பட்ட நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் ஆகியவை சர்வதேச சட்டங்களையும், சர்வதேச கடப்பாடுகளையும் மதித்து நடக்க விரும்பும் விடுதலைப்புலிகளின் நோக்கத்தையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

சர்வதேச ராஜதந்திரக்கட்டுப்பாடுகளை நிறைவேற்றுதல் என்பதும் சர்வதேச அங்கீகாரத்திற்கான முன் நிபந்தனையாக உள்ளது. ஒரு அமைப்போ, அல்லது புதிதாக உருவாகும் ஒரு அரசோ அக் கடப்பாடுகளை நிறைவேற்ற தகுதி உடையதாய் இருத்தல் வேண்டும். சர்வதேச உறவுகளை வளர்த்துக் கொள்ளும் தகுதியும் சர்வதேச சட்டங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மதித்து நடக்கும் கட்டுப்பாடும், தலைமைத் துவமும் ஒழுங்கமைவும் சட்டதிட்டங்களும் உடையதாய் இருத்தல் வேண்டும். கட்டளைப் படிமுறை ஒரு விடுதலை அமைப்பினுள் இருத்தல் அவசியம். சர்வதேச இராஜதந்திர கடப்பாடுகளை நிறைவேற்றும் தகுதியும் கட்டுப்பாடும் இருந்தால் தான் சர்வதேச இயக் கம் மதித்து நடக்கும் என்ற நம்பிக்கையை சர்வதேச சமூகம் பெற்றுக் கொள்ளும்.

மேலும் சர்வதேச சட்டங்கள் என்று கூறும் போது போர் நடைபெறும் இடங்களில் ஆயுத முரண்பாடு சம்பந்தமான சட்டங்களும் மனித உரிமை சம்பந்தமான சட்டங்களும் முதன்மை நிலை பெறுகின்றன. ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமைகள் சாசனம், மனித உரிமைகளை வலியுறுத்தும் உறுதியான பட்டயமாக விளங்குகின்றது. மேலும் சமூக, பொருளாதார, கலாச்சார, குடியியல், அரசியல் ரீதியான சர்வதேச சட்டங்களும், மனிதஉரி மைகளை வலியுறுத்தும் சட்டங்களாக விளங் குகின்றன. 1949 ம் ஆண்டு உருவான ஜெனீவா மரபுகளும், 1977 இல் உருவான இணைப்பு விதிகளும் ஆயுத முரண்பாட்டின் போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை எடுத்துக்கூறி அவற்றை மீறுவதை மனித உரிமை மீறல்களாகவும், போர்க்குற்றங் களாகவும் எடுத்துரைக்கின்றன. மனிதஉரி மைகள் தொடர்பான சட்டங்களை மதித்து நடப்பதாக சர்வதேச ஒப்பந்தங்களில் கையொப்பம் இட்ட சட்டரீதியான அரசாங் கங்களை மட்டுமல்ல, விடுதலை அமைப்புக் களையும் குற்றஞ்சாட்டும் புதிய நடைமுறை தோன்றியுள்ளது. எனவே மனித உரிமைகளை பேண வேண்டுமாயின் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்குரிய சமூக, அரசியல், நீதித் துறை கட்டுமானங்களை விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விடுதலை அமைப்புக்கள் உரு வாக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப் படுகின்றன. மனித உரிமைகளை பேணும் முயற்சியாக விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்படும் இக் கட்டுமானங்களையும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அங்கீகரிக்க வேண்டிய நிலைக்கு உள்ளா கின்றன. ஒருபுறம் மனித உரிமைகளைப் பேணவும், இன்னொருபுறம் அரசியல் அங்கீகாரத்தைப் பெறவும் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப்புலிகளின் இம் முன்னெடுப்பு பலரினதும் பாராட்டிற்கு உள்ளாகி உள்ளது.

சர்வதேச அங்கீகாரத்துக்கு ஜன நாயகம், சிறுபான்மையினரின் உரிமைகள் என்பனவும் சில பல்தேச அமைப்புக்களால் (*multilateral*) வலியுறுத்தப்பட்டுள்ளன. ஜன நாயகம் என்று கூறும் போது, மக்கள் ஜன நாயகத்தை கொள்கை அடிப்படையிலும், நடைமுறையிலும் கடைப்பிடிப்பதாக உள்ளது. அதேவேளை போர்க்கால சூழ்நிலைகள் ஜனநாயக நடைமுறைகளை பூரணமாக நிறைவேற்ற முடியாது தடுக்கின்றன. இது எந்த ஜனநாயக நாட்டிலும் போர்க்காலங்களில் ஏற்படும் சிக்கலாயினும் போர் முடிந்தபின் மக்கள் ஜனநாயகம் நேர்த்தியாக நிறைவேற் றப்படும் என்பது உறுதியான விடய மாகும். எமது மக்கள் முறையான ஜனநாயக விழுமியங்களுக்கு தகுதியாக இருக்கும் போது அதை நடைமுறைப்படுத்தலே அரசின் கடமையாகவும் இருக்கும். சிறு பான்மையினரின் உரிமைகள் என்ற விடயத் தில், தமிழீழத்தில் வாழுகின்ற முஸ்லீம்கள் தமது விசேட கலாச்சார தனித்துவங்களுடன் தங்களை தமிழீழப் பிரஜைகளாக அடை



யாளம் காணுவார்கள் என்பதே உண்மை யாகும். இத்தகைய உணர்வுகளின் அடிப்படையில் தமிழீழப் போராட்டத்தோடு தம்மை இணைத்துக்கொள்ள முற்படும் போதே தமிழீழத்தில் இனங்களுக் கிடையிலான இணக்கமும், பல கலாச்சார மக்களிடையே ஒற்றுமையும் ஏற்படுகின்றது. ஒடுக்கும் சிறிலங்கா தேசத்தோடு தம்மை அடையாளம் காண முற்படும் சிலரின் தவறான போக்கு, தமிழ் முஸ்லீம் மக்களைப் பிரிப் பதற்கும் தொடர்ச்சியான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குவதற்குமே வழிவகுக்கின்றது.

சிறுபான்மை மக்களின் பிரச்சினை தமிழீழ வரையறைக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக "குறோசியா"வில் நடந்த நிகழ்வை கூறலாம். குறோசியாவில் வாழுகின்ற சிறுபான்மை மக்களின் உரிமைகளை யுகோஸ்லாவியாவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து பிரிந்து தனிநாடாய் அமைந்துள்ள குறோசியாவினுள்ளேயே தீர்க்கபடவேண்டுமென ஐரோப்பிய சமூக நாடுகள் வரையறை செய்துள்ளன.குறோசியாவில் வாழுகின்ற சிறுபான்மை இனத்தவரின் உரிமைகள் பற்றிய சட்டங்களையும் வகுத்துள்ளன.சர்வதேச சட்டங்களுக்குள் புகுந்த இப்புதிய நடைமுறை



கைதிகளைப் பார்வையிடும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர்.

எமது பிரச்சினையிலும் ஒரு முன்னுதாரணமாக விளங்கலாம். ஏராளமான புதிய நாடுகள் உருவாகியுள்ளன. மேலும் புதிய நாடுகள் தமது சுதந்திரக்குரலை எழுப்பிவருகின்றன. இப்புதிய நாடுகளின் உருவாக்கங்கள் சர்வதேச நடைமுறையிலும், சட்டங்களிலும் புதிய மாற்றங்களைத் தோற்றுவித்து வருகின்றன. சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கும் உரிமை காலனித்துவ ஆட்சியின் கீழ் அடக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உரியது என்பது தற்போது நீங்கி அங்கீகரிக்கப்பட்ட அரசினுள் இருக்கும் ஒரு தேசிய இனம், தனது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்துப் பிரிந்துபோகலாம் என்பதும், அப் புதிய நாடுகள் அங்கீகரிக்கப்படலாம் என்பதும் நிரூபிக்கப்பட்டுவருகின்றது. ஒரு நாட்டின் நிலவொருமைப்பாட்டைப் பேணுதல் என்பது வெளிநாட்டு ஆக்கிரமிப்பு சம்பந்தப்பட்டதேயன்றி ஒரு நாட்டிலுள்ள தேசிய இனங்கள் தமது பாரம்பரிய, வரலாற்றுரீதியான, தொடர்ச்சியான நிலப்பகுதிகளை பிரித்துத் தனிநாடு அமைப்பதைத் தடுக்காது என்பதும் சர்வதேச நடைமுறையாகிவருகின்றது. தொடர்ச்சியானதும், பாரதூரமானதுமான மனித வுரிமை மீறல்களுக்கு உட்படும் அல்லது இன அழிவிற்கு உட்படும், அல்லது இனவாத ரீதியான கொடூர ஒடுக்குமுறைக்குட்படும் ஒரு

தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து பிரிந்து தனிநாடாகலாம் என்பது நடந்துகொண்டிருக்கின்ற விடயமும், எதிர் காலத்தில் சர்வதேச சட்டத்தில் இடம் பெறப்போகின்ற விடயமாகவுமுள்ளது. உள்நாட்டுக்காலனித்துவத்திலிருந்து விடுதலை என்று இதனை அழைக்கலாம்.

சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட சர்வஜனவாக்கெடுப்பு வலியுறுத்தப்படுகின்றது. சோவியத்யூனியனது குடியரசுகளைப் பொறுத்தவரையிலோ, யூகோஸ்லாவியா குடியரசுகளைப் பொறுத்தவரையிலோ அவை தமது குடியரசுகளில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தி மக்களின் கருத்துக் கணிப்பெடுப்பின் பின்பே அனேகமான சந்தர்ப்பங்களில் சுதந்திரப்பிரகடனங்கள் செய்துள்ளன. வாக்கெடுப்பில் கலந்து கொண்டோர் சில குடியரசுகளில் ஐம்பது வீதமான அளவில்கூட இருந்துள்ளனர். சில குடியரசுகள் மிகக்குறைந்த எண்ணிக்கையான சனத்தொகையுடையனவாகவும் இருந்துள்ளன. குரோஷியாவில் ஐம்பது இலட்சம் மக்கள், ஸ்லோவேனியாவில் இருபது இலட்சம் மக்கள், பொஸ்னியா ஹெஸிகோவினாவில் நாற்பத்தைந்து இலட்சம் மக்கள் என்ற அளவிலேயே தனிநாடுகளாக பிரிந்த யூகோஸ்லாவியக் குடியரசுக்களில் சனத்தொகை உள்ளது. சிறிய எண்ணிக்கையுள்ள மக்கள் என்ற ரீதியில் ஒரு மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையை மறுக்கமுடியாது. ஒரு நாட்டுக்குள் பல்வேறு தேசிய மக்களிடையே சமத்துவம் பேணப்பட முடியாது போனால் அம் மக்கள் தமது சுயவிருப்பின் பேரில் தாமாகப் பிரிந்துபோய் சமத்துவத்தை இன்னொரு நாடு என்ற அடிப்படையில் நிலைநாட்டல் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. தேசிய இன வரையறையில் கலாச்சார, பொருளாதாரக் காரணங்களை விட மொழி ஒற்றுமை முக்கியத்துவம் வகித்துள்ளதையும் கிழக்கு ஐரோப்பிய உதாரணங்கள் திடமாக விளக்கியுள்ளன.

போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமாயின் அதனை அடக்குவதற்கு முற்படாது, ஆதரவளித்து அவற்றின் சுதந்திரத்தைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்பதும் அண்மைக்கால வரலாற்றின் படிப்பினையாகும். உலக அங்கீகாரம் அடக்குமுறையாளனைப் பின் வாங்கச்செய்வதோடு விடுதலைக்காகப் போராடும் மக்களின் நீதியான போராட்டத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெற்றிகொள்ளச் செய்கின்றது. அங்கீகரிக்கப்பட்ட புதிய நாடு தார்மீகப் பலம் பெறுவதோடு, தன்னைத் தொடரும் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும், தன்னுடைய தற்காப்புகளை உறுதிசெய்துகொள்ளவும், வேறு நாடுகளிடமிருந்து சட்டரீதியாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும் முடிகின்றது. ஆக்கிரமிப்பு முடிவுற்று, ஒரு மக்கள் விடுதலை பெற்று தம்மைப் பாதுகாக்கத் தகுதி பெறுவராயின் போரும் முடிவுறுகிறது. அங்கு சமாதானமும் சுபீட்சமும் ஏற்படுகிறது.

கிழக்கு ஐரோப்பிய மக்கள் மட்டுமல்ல, கிழக்கு ஆபிரிக்காவில் பல மக்கள், ஐக்கிய இராச்சியத்தில் ஸ்கொட்லாந்து மக்கள், கியூபெக் மக்கள், பெல்ஜியத்தில் பிளேமிஷ் மக்கள் என்ற ரீதியில் புதிதாகப் பல தேசிய இனங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை எழுப்பியுள்ளன. இவ்வாறு நாடுகள் பிரிந்து தனி நாடாகும் சந்தர்ப்பம் ஏற்படும் அதே வேளை, கூட்டாக இணைந்து செயற்படும் போக்கும் இன்னொருபுறம் நடந்துகொண்டிருக்கின்றது. ஐரோப்பியசமுக நாடுகள் நிதிய இணைவு, அரசியல் இணைவு என்ற ரீதியில் கூட்டுச் சேரமுனைவதும், பிரிந்துபோன சோவியத் குடியரசுகள் சுதந்திர அரசுகளின் பொது நலவாய அமைப்பு என்ற ரீதியில் கூட்டுச் சேர்ந்திருப்பதும் கண்கூடு. பொருளாதார நோக்கங்களுக்காகவே இக்கூட்டுகள் ஏற்படுகின்றன. பனிப்போர் (*Cold War*) முடிந்து புதிய உலக ஒழுங்கு ஏற்படும் நிலையில் தேசிய இன அடிப்படையில் புதிய நாடுகள் உருவாவதும், அவை பொருளாதார நோக்கங்களுக்காக இணைவதும் தவிர்க்கமுடியாததாக இருக்கும். இம்மாற்றங்களை ஒருங்கமைப்பதில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை மிக முக்கிய பாத்திரத்தை வகிக்கும். ஐக்கிய நாடுகளின் பின்னணியில் தனிப்பெரும் வல்லரசாக வரமுயலும் ஐக்கிய அமெரிக்கா செயற்படும். பிராந்தியப் பிரச்சனைகளும் இவற்றின் கையாள்கைக்கு உட்படலாம். எமது பிரச்சனையும் சர்வதேச பிரச்சனையின் மட்டத்திற்கு உயர்த்தப்பட்டு சர்வதேச மத்தியஸ்தத்தின்கீழ் தீர்வுக்கு உள்ளாகலாம். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தற்போதுள்ள நாடுகளுடனும் இனி உருவாகும் நாடுகளுடனும் இறைமையுள்ள தமிழீழ அரசும் கூட்டாக இணைந்து செயற்படுதலும் ஒரு கூட்டமைப்பில் ஒன்றுதலும் சாத்தியமே.

## காலம்

வீசும் காற்றுக்கு
உருளும் சருகு மணித்துளிகள்
நாளும் கிழமையும்
மாதங்கள் வருடங்களாய்
நாட்களைத் தின்று பெருத்தது
காலம்

ஒவ்வொரு பொழுதும்
சாமம் கடந்த தூக்கமும்
புலர்வுக்கு முந்திய விழிப்புமாய்
அவசர வேகத்தில்
இயந்திரமானது வாழ்க்கை

இனவெறிக்கொடுமை தப்பி
எங்கோ ஓர் அன்னியத் தெருவில்
முகங்களை இழந்து
சுயங்கள் கருகி
பிராங்கும் மார்க்கும்
அசையும்
அசையாச் சொத்தாகி
வசந்தங்களை அழித்துவிட்டு
வரவுகளில் தொகை பதியும்.

என்றாவது
நினைவுச் சுழிகளில் அமிழ்ந்து
இமை கனக்காத கணங்களில்
வெறுமையும் விரக்தியும்
உள்மனவெளி நோக்கி
உமிழ்ந்து போகையில்
எனக்குள் நானே
வதைபட்டுக்கொள்ள
நிகழ்வும் நினைவும்
நெஞ்சினில் சூடேற்றும்.

அலாரச் சத்தம்
அமைதி சிதைக்க
நிகழ்வு, நினைவு;
இருப்பு, தேடல் எல்லாம் மறந்து
இயந்திரயுகத்தில்
மீண்டும் கரைய
நாட்களைத் தின்று பெருத்தது
காலம்

—கஜன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸ்ரீலங்காவிற்கான வெளிநாட்டுதவி

## பின்னணி என்ன?

"இலங்கை அரசு மனித உரிமைகளை மீறுகின்றது. மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டால் நிதி உதவி நிறுத்தப்படும்." இவ்வாறு நிதி வழங்கும் நாடுகள் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து கூறிவந்தன.

அத்துடன் "இனப்பிரச்சினை சமாதானபூர்வமான முறையில் தீர்த்துவைக்கப் படவேண்டும், அல்லது நிதி உதவி நிறுத்தப்படும் என்றும் கூறியதுடன் இனப்பிரச் சனையை சமாதானபூர்வமாகத் தீர்ப்பதற் கெனப் பல சமாதானத்தூதுக்குழுக்களை மேற்குலகநாடுகள் இலங்கைக்கு அனுப்பி வைத்தன. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கத் தாம் தயாராக இருப்பதாகப் பல மேற்குலக நாடுகள் கூறின.

தொண்டமானின் தீர்வுத்திட்டத்தைச் சிங்கள அரசு புறக்கணித்த நிலையில், தென்னிலங்கையில் சமாதானத்திற்கான எதிர்க் குரல்கள் ஓங்கியிருந்த நிலையில் நிதி வழங்கும் நாடுகளின் கூட்டம் கூடியது. ஆனால் அந்தக் கூட்டத்தில் இலங்கையரசு கோரியதை யும்விட அதிகமான நிதியுதவி வழங்க நிதி வழங்கும் நாடுகள் முன்வந்தன.

அப்படியாயின் இதில் ஒரு பெரும் முரண்பாடு உண்டு. உண்மையில் நிதி யுதவியை நிறுத்தியிருக்கவேண்டிய அல்லது நிதியைக் குறைத்திருக்கவேண்டிய நிதி வழங்கும் நாடுகள் ஏன் இலங்கை கோரி யதையும்விட அதிகமான நிதியுதவியை அளித்தன? மேற்குலகம் பேசும் சமாதானமும், சமாதானத்தூதுக்குழுக்களும் ஒரு வெளி வேஷமா? உண்மை என்ன? இவையே இன்று மக்களிடமுள்ள பிரதான கேள்விகள்.

நிதியுதவிவழங்குதல் என்பது உண்மையில் ஒரு அரசியல் நடவடிக்கையே ஆகும். ஆதலினால் இதற்குரிய அரசியற் பின்னணியை ஆராய்ந்தால் இதற்குரிய தெளிவான விளக்கத்தைப் பெறுவது சாத்தியம்.

நிதிவழங்கும் நாடுகளிடம் இலங்கை பற்றிய பின்வரும் அரசியற் தீர்மானம் உண்டு. அதன்படி இலங்கையில் ஸ்திரமான அரசாங்கம் பதவியிலிருக்கவேண்டும். அத்துடன் இன்றைய நிலையில் இனப்பிரச் சனைக்கு ஓரளவு சமாதானத்தீர்வு எட்டப் படவேண்டும் என்பதாகும். இலங்கையில் மேற்குலகத்திற்கு உகந்த அரசியல்-பொரு ளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிப்பது ஐ.தே.க அரசாங்கமாகும். ஆதலினால் அத்தகைய கொள்கையைக் கொண்ட ஐ.தே.க

### சாரணன்

அரசாங்கத்தை சு.க மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் பிடியிலிருந்து பாதுகாப்பது மேற்குலகின் தலையாய கொள்கையாகும். ஐ.தே.க விலிருந்து பிரிந்த லலித், காமினி தலைமையிலான ஐ.தே.மு வினது அரசியற் - பொருளாதாரக் கொள்கை பெருமளவுக்கு ஐ.தே.க வினது கொள்கையையே ஒத்தது. எனவே சு.க தவிர்ந்த ஐ.தே.மு பதவிக்கு வருமாயின் அது மேற்குலகிற்கு உகந்ததாகவே அமையும்.

ஆனால், இந்த விடயத்தில் மேற்குலகு ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வருவதில் சிக்கலுண்டு. அதாவது பொதுவாக ஐ.தே.க விற்கு 42% வாக்குகள் கிடைப்பது வழக்கம். ஆனால், ஐ.தே.க இரண்டாக உடைந்துள்ள நிலையில் இந்த ஐ.தே.கவோ, அல்லது ஐ.தே.மு.வோ இரண்டும் பதவிக்கு வரக்கூடிய பெரும்பான்மையைப் பெறுவது சிலவேளை இயலாது போகலாம். அவ்வாறான ஒரு கட்டத்தில் அரசியல் ஸ்திரமின்மை தோன்றக் கூடும். எக் கட்சியும் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாதவிடத்து இராணுவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிலவேளை ஆட்சிக்கு வரக்கூடும். இராணுவம் இலங்கையில் ஆட்சிக்கு வருவதை இந்தியா ஆதரிக்காது என்பதாலும் இராணுவ ஆட்சிக்கு எதிரான அழுத்தத்தை மேற்குலகின் மீது இந்தியா போடும் என்பதாலும், கெடுபிடி யுத்தம் முடிவடைந்துள்ள சூழலில் இராணுவ ஆட்சியை ஆதரித்து தமது நாட்டு மக்களுக்கு மேற்குலகம் நியாயம் கூற முடியாது என்பதாலும் அதனையும் மேற்குலகம் விரும்பாது.

எனவே இந்நிலையில் மேற்குலகத்திற்கு ஒரே ஒரு பிடி பிரேமதாசா அரசாங்கத்தைப் பாதுகாப்பதைத் தவிர வேறல்ல என்பதே. லலித், காமினி போன்ற ஐ.தே.மு வினரது பிரதான கொள்கை பிரேமதாசா அரசாங்கத்தை வீழ்த்துவதுதான். பிரேமதாசா அரசாங்கத்துக்கு மேற்குலகம் நிதியுதவி வழங்காதுவிட்டால் நாட்டில் அபிவிருத்தியற்ற சூழலில் பிரேமதாசாவை வீழ்த்துவது இலகு என்பதே லலித்தின் முடிவு. இதன் பொருட்டு நிதிவழங்கும் நாடுகளின் தூதரகங்களுக்கெல்லாம் லலித் ஏறி இறங்கி நிதியுதவி வழங்குவதை நிறுத்துமாறு கோரினார். பிரேமா கவிழ்ந்து அந்த இடத்தில் ஐ.தே.மு பதவிக்கு வரமுடியாது போனால் அது மேற்குலகிற்குப் பெரும் பாதிப்பாக முடியும். இந்நிலையில் தெளிவற்ற ஒரு போர் அரசியற் சூழலில் பிரேமதாசாவைக் கவிழ்ப்பது ஒரு விஷப் பரீட்சையாக முடியும்.

அடுத்துவரவுள்ள தேர்தலில் பிரேமாவைக் கவிழ்ப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ள லலித்-காமினி குழு தாம் பதவிக்கு வருவது நிச்சயமற்றதாக இருக்குமேயாயின் பிரேமாவை வீழ்த்துவதற்காக சு.க வுடன் பின்வருமாறு கூட்டுச்சேர வாய்ப்பு உண்டு. அதாவது ஜனாதிபதி ஆட்சிமுறை பிழையானது என்றும் அதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்குமென்று சு.க வுடன் ஒரு உடன்பாட்டிற்குப் போகலாம். சு.க வைப் பொறுத்தவரையிலும் தாமும் பதவிக்கு வருதல் அநேகமாகச் சாத்தியமற்ற சூழலே உண்டு என்ற நிலையில் பிரேமாவைக் கவிழ்ப்பதில் லலித்-காமினி குழுவுடன் ஓர் உடன்பாட்டுக்கு வரலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுப்பிரதிநிதியை தேர்தலில் நிறுத்தாமையின் விளைவே பிரேமாவை ஆட்சிக்குக் கொண்டுவந்தது என்ற உண்மையை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ள சு.க மற்றும் எதிர்க் கட்சியினர் எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கலைப்பதற்கென்று ஒரு பிரதிநிதியைத் தேர்தலில் நிறுத்த வாய்ப் புண்டு. இது நடைமுறைக்கு வருகின்றதோ இல்லையோ. இப்படியும் ஒரு சாத்தியக்கூறு உண்டு என்பதை உணரும் மேற்குலகம் எதிர்கால அரசியல் ஸ்திரமின்மையின் அபாயத்தை முன்னுணர்ந்து அதனைத் தவிர்க்குமுகமாகப் பதவியிலிருக்கும் பிரேமாவையே பலப்படுத்த முயலலாம். இதன் வெளிப்பாடகவே மேற்குலகின் இந்த அதிகபட்ச நிதியுதவியைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மேற்குலகிலும் இலங்கை பற்றிய ஓர் அரசியல் கணிப்பீடும் அரசியல் தீர்மானமும் உண்டு. அது இலங்கை அரசின் கணிப்பின் படியே நடக்கவேண்டுமென்பதில்லை. பிரேமதாசா அரசாங்கத்தைப் பாதுகாக்க பிரேமா கோரும் நிதி போதாது என்பதை உணர்ந்துகொண்ட மேற்குலகம் தனது கணிப்பின்படி பிரேமா கோரியதிலும் அதிகமான நிதியை வழங்கியுள்ளது. இது தான் அரசியல்.

அதேவேளை இனப்பிரச்சனையை இன்றைய நிலையில் சமாதான பூர்வமாகத் தீர்த்துவைக்க மேற்குலகம் விரும்புகின்றதென்றே ஓரளவு கூறலாம். அதனை பிரேமாவிடம் வற்புறுத்தியுமுள்ளன. அதேவேளை பிரேமாவைப் பலவீனப்படுத்தி வீழ்த்துவதும் அவர்களுக்குப் புத்திசாலித்தனமாகப் படவில்லை. ஒரு புறம் பிரேமாவைப் பாதுகாப்பதும் மறுபுறம் இனப்பிரச்சனையை ஒரு சுமுக நிலைக்குக் கொண்டுவருவதும் என்ற இரு நோக்கு நிலையில் காலூன்றியபடி மேற்குலகம் செயற்படுகின்றதெனலாம். கெடுபிடியுத்தம் முடிவடைந்துள்ளமை, மேற்குலகிற்கும் இந்தியாவிற்குமிடையிலான உறவு வளர்ச்சியடைந்துவருகின்றமை, இலங்கையில் இந்தியாவின் கைகள் பலவீனப் பட்டுள்ளமை ஆகிய அனைத்துப் பின்னணிகளையும் வைத்துப் பார்க்கையில் இனப்பிரச்சனை ஒரு மித நிலை அடைவதை, ஓரளவு சுமுகநிலை தோன்றுவதை மேற்குலகம் தற்போது விரும்புகின்றதென்றே கூறலாம். எனவே ஒருபுறம் பிரேமாவைப் பாதுகாத்தல், மறுபுறம் இனப்பிரச்சனை சம்பந்தமாக சுமுக நிலை எனும் இரண்டிற்கும் நடுவிற்தான் மேற்குலகின் கொள்கையைப் புரிந்துகொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பிரசவம்

யோனிவாய் நோக்கின
துவக்கின் கூர்முனைகள்

பிரசவக் கூச்சலோடு
துவக்கின் வெடியோசை
இனிதாய்ச் சங்கமிக்கும்

எனினும்
பிரசவம் துவக்கினால் மட்டும் நிகழ்வதல்ல
அது
துவக்கோடு முடிவதுமல்ல

பொங்கி எழும்
பல்கிளை ஞான ஆற்றில்
முழ்கி எழும் மருத்துவிச்சி
அச்சம் மடமை
அகந்தையுடன் கயமைகளை
பன்னீர்க்குடமாய் உடைத்து வெளிவிட
புதுயுகம்
படைத்தலில் காத்தலில்
அழித்தலில் படைத்தலில்
இனிதாய்த் தளிர்க்கும்.

தளிரினைத் தடவிய
மருத்துவப் பெண்ணாள்
துவக்கினை ஊன்றி தொடர்நடை புரிவாள்

பிரசவம்
துவக்கினால் மட்டும் நிகழ்வதல்ல

–மு.நேமிநாதன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தியாவை வெற்றி கொள்ளல் சாத்தியமா?

"விடுதலைப்புலிகளை நசுக்குவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டது. இந்தியாவின் இந் நடவடிக்கைகளிலிருந்து மீண்டு போராட்டத்தினை வெற்றிக்கு இட்டுச்செல்வது சாத்தியமா?"

இப்படியான சந்தேகம் மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களிற் சிலருக்கு ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் திகதி விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே மோதல் ஆரம்பித்த போதும் இந்தியாவுடன் மோதி மீளமுடியுமா என்ற சந்தேகம் பலர் மனதிலும் எழுந்தேயிருந்தது.

அன்று தமிழீழத்தின் மீது இந்தியா மேற்கொண்ட ஆக்கிரமிப்பினைக் காரசாரமாகக் கண்டித்து எழுதிய இந்தியாவின்

## திலீபன்

புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான ஓ.வி.விஜயன் (விஜயன் ஒரு தலைசிறந்த மலையாள எழுத்தாளராக வர்ணிக்கப்படுபவர். மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் பல ஆக்கங்களை எழுதி புகழ்பெற்றவர்.) அவர்கள் கூட விடுதலைப்புலிகள் - இந்திய இராணுவ மோதல் ஆரம்பித்தவுடன் எழுதிய கட்டுரை ஒன்றினைப் பின்வருமாறே ஆரம்பித்தார்:

"அநேகமாக இக்கட்டுரை அச்சேறும் போது தமிழீழவிடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டிருக்கலாம்! ஆனால், அந்த மண்ணின் மைந்தர்கள் 2500 பேர் தமது அடிப்படை உரிமைகளுக்காக, ஒரு பெரிய நாட்டின் படைப்புலம் நடத்திவந்துள்ள அக்கிரமமான, கோழைத்தனமான ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து வீரமரண மடையத் தயங்கவில்லை - இதுவே வரலாறாக எழுதப்படும்..." *(Illustrated weekly - Dec.13th of 1987)*

ஆனால், 1990ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி இந்தியா தமிழீழத்திலிருந்து வெளியேறியபோது தமிழீழம் முழுவதிலும் எங்கும் நிறைந்தவர்களாக விடுதலைப்புலிகள் வெளிப்பட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான 895 நாள் யுத்தத்தில் இந்தியா அரசியல், இராணுவ, இராஜதந்திர, தார்மீக ரீதியில் தோல்வியையே தழுவியிருந்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினூடாக இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட நேரடி இராணுவ நடவடிக்கையினாலேயே இந்தியாவினால் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்ளமுடியவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை அமுல்படுத்துவதன்மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவரல், இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பினைப் பேணல், இலங்கையில் தனது நலன்களை உறுதிசெய்துகொள்ளல், இந்தியாவில் முகிழ்த்தெழும் விடுதலைப் போராட்டங்களை அச்சுறுத்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயன்ற இந்திய ஆளும் வர்க்கத்திற்கு கிடைத்த தோல்வி தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுத்துச்செல்லும் விடுதலைப்புலிகளின் மீதான கசப்புணர்வினை வளர்த்திருந்தது.

இவ்விடத்தில் ஒரு வினாவினை எழுப்புதல் முக்கியமானது. இந்தியாவிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் ஏற்பட்ட கசப்புணர்வு அல்லது முரண்பாடு எப் பின்னணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




யினைக் கொண்டது என்பதே அவ்வினா வாகும்.

இலங்கையின் வட கிழக்குப் பகுதியில் எத்தகைய ஆட்சிமுறை அமையவேண்டும் என்பதனை இந்தியா தீர்மானிக்க முற்பட்டதிலிருந்தே இக் கசப்புணர்வு ஆரம்பமாகியது எனலாம். இன்னொருவகையிற் கூறுவதாயின் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையினை இந்தியா தனது கையில் எடுத்தபோதே விடுதலைப்புலிகள் இந்தியாவுடன் முரண்படத்தொடங்கினர். விடுதலைப்புலிகள் மட்டுமல்ல தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை (அதாவது தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் உரிமை) தமிழீழ மக்களிடமே இருக்கவேண்டும் என்ற கருத்தில் உறுதியாக இருக்கும் எவரும் இந்தியாவுடன் இவ்விடயத்தில் முரண்பட்டே தீருவார்கள்.

இந்தவகையில் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய ஆளும் வர்க்கத்தினருக்கும் இடையே ஏற்பட்ட கசப்புணர்வு தவிர்க்கமுடியாதது. வரலாற்று வளர்ச்சிப்போக்கின்படி இது இயல்பானது.

இம்முரண்பாடு அல்லது கசப்புணர்வு தீர்க்கப்படமுடியுமா? அதற்கு என்ன செய்ய வேண்டும்?



இது ஒரு வினாவாக எழுமேயானால் தமிழீழமக்களின் நலன்களின் அடிப்படையில் சிந்திக்கும் எவரும் எத்தகைய முடிவுகளை எடுக்கமுடியும்?

விடுதலைப்போராட்டத்தில் குதித்துள்ள தமிழீழமக்கள் தமது சுயநிர்ணய உரிமையினை இந்திய ஆளும் வர்க்கத்திடம் தாரைவார்த்துக் கொடுத்தால் இம்முரண்பாடு நீங்கமுடியும். அல்லது இந்திய ஆளும்வர்க்கம் தமிழீழமக்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகாிக்க முன்வரும்போது இம்முரண்பாடு நீங்கமுடியும்.

மிகச் சுலபமாக எழுத்தில் எழுதிவிட்ட இவ் விடயம் நடைமுறைச் சாத்தியமானதா?

இந்திய ஆளும் வர்க்கத்துடன் சுமுக நிலை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையினை விடுதலைப்புலிகள் இந்தியாவிடம் தாரை வார்க்க முடியாது. அதேவேளை இந்திய ஆளும்வர்க்கம் தமிழீழமக்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகாிக்க உடனடியாக முன்வருமெனவும் எதிர்பார்க்கமுடியாது.

## இந்தியாவின் நடவடிக்கைகளும் காரணங்களும்:

இன்றையநிலையில் இந்திய ஆளும் வர்க்கத்தினால் விடுதலைப்புலிகளுக்கெதிராகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தமுடியும்:

1). தமிழகத்திலும் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளமை.

2). விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், மூத்த உறுப்பினர் பொட்டம்மான் ஆகியோர் ராஜீவ்காந்தியின் கொலையுடன் இணைக்கப்பட்டுள்ளமை.

3). விடுதலைப்புலிகளின் சர்வதேச வலைப்பின்னலை பலவீனமாக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளதாகக் கருதப்படுகின்றமை

விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களாகச் சித்தரித்து அவர்களுக்கு ஏற்படக் கூடிய சர்வதேச அங்கீகாரத்தினைத் தடுத்து நிறுத்தும் நோக்கமும் இச்செயற்பாடுகளின் பின்னணியில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

ஆனால், ஆழமாகப் பிரச்சனைகளை நோக்கும் எவரும் இந்தியாவின் நடவடிக்கை களுக்கான உண்மைக்காரணங்களை நன்கு அறிந்துகொள்ள முடியும்.

1). இலங்கைத்தீவில் தமிழீழம் எனும் நாடோ அல்லது இந்தியாவில் உள்ள மாநி லங்களுக்குள்ள அதிகாரங்களைவிடக் கூடுதலான அதிகாரம் கொண்ட அரசியல் அமைப்புமுறை வடகிழக்கில் உருவாகுவத னையோ விரும்பாமை. (இது நிகழுமாக இருப்பின் இந்தியாவில் உள்ள மாநிலங் களிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும்.)

2). இலங்கையின் இனப்பிரச்சனைக்கு சர்வதேச மத்தியஸ்தம் ஏற்படுவதை விரும்பாமை.

3). இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்குக் கிடைத்த தோல்வியும் அதன்மூலம் விடுத லைப்புலிகள் மீது ஏற்பட்ட வெறுப்புணர்வும்.

4). இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளை வென்று நிமிர்ந்த விடுதலைப்புலிகளின் வளர்ச்சி தனது நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் எனும் அச்சம். (இந்திய இராணுவத்தின் ஒடுக்குமுறை யினையும் வெற்றிகொண்டு விடுதலைப் புலிகள் பலம்மிக்க அமைப்பாக வளர்ந் துள்ளமை இந்தியாவில் போராட்டம் நடத்தும் அமைப்புக்களுக்கு புதிய உத்வேகத்தினை அளித்துள்ளது.)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மேற்கண்ட காரணங்கள் பின்னணியில் இருக்கின்றமையினை நாம் விளங்கிக் கொள் ளும்போது இந்தியாவின் நடவடிக்கைகளின் நோக்கத்தினையும் புரிந்துகொள்ளமுடியும்.

## சாதகமான நிலைமைகள்

இந்தியாவின் எதிர்நடவடிக்கைகளி லிருந்து மீண்டு வெற்றிப்பாதைக்குப் போராட்டத்தினை இட்டுச்செல்வதற்கான சாதகமான சூழ்நிலைகள் எமக்கு உள்ளன. அவற்றினைத் தொடர்ந்து நோக்குவோம்.

1). எந்த இராணுவத்தினாலும் நசுக்கப்படமுடியாத அளவுக்கு பலமிக்க தேசியப்படையாக விடுதலைப்புலிகள் இயக்கம் வளர்ச்சிகண்டுள்ளமை.

2) சர்வதேசரீதியாக இன அடிப் படையிலான புதிய நாடுகள் உருவாகுவதும் அதற்கு சர்வதேச ரீதியில் கிடைத்துவரும் அங்கீகாரமும்.

3) விடுதலைப்புலிகளைத் தவிர்த்து விட்டு இலங்கையின் இனப் பிரச்சனை குறித்துப் பேசமுடியாத யதார்த்தநிலை.



4) இந்தியாவில் மக்களிடையே விடுதலைப்புலிகளுக்கு வளர்ந்துவரும் ஆதரவு.

5) ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாகவுள்ள பிரேமதாசா இந்திய எதிர்ப்பாளராக இனங்காணப்படுவது.

மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் எமக்கான வாய்ப்புகளை நோக்குவோம்.

விடுதலைப்புலிகள் தமிழீழ மக்களின் முன்னணிப்படையாக தமிழீழத்தில் பெரும் பான்மையான பிரதேசங்களைக் கட்டுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாட்டுக்குள் வைத்து, அப்பிரதேசங்களில் சர்வதேசச் சட்டங்களுக்கு ஏற்றவகையில் அரசநிர்வாக அமைப்பினையும் உருவாக்கிவருகின்றனர். இந்நிலையில் இந்தியா எத்தகைய எதிர்நடவடிக்கையினை மேற்கொண்டாலும் அதை முறியடித்து சொந்த மண்ணிலும் மக்களிலும் நம்பிக்கைவைத்துப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லக்கூடிய நிலைமைகள் உள்ளன.

மேலும், சர்வதேசரீதியாக தேசிய இனங்களின் புதியநாடுகள் தோற்றம்பெற்று வருவது விடுதலைப்புலிகளின் போராட்டம் சர்வதேசரீதியான போராட்டத்தின் ஒரு அங்கம்தான் எனும் உண்மையினை உலகுக்கு வெளிப்படுத்துகிறது. இதனால் எமது போராட்டத்தினை வெறும் பிரிவினைப்போராட்டமாகக் குறுக்கிவிடமுடியாத நிலைமைகள் தோன்றியுள்ளன.

நேரடி இராணுவநடவடிக்கை மூலமே இந்தியாவினால் தோற்கடிக்கமுடியாத விடுதலைப்புலிகளை அழுத்தங்களினால் அடிபணியவைக்கலாம் என இந்தியா முயற்சிப்பது எவ்விதத்திலும் வெற்றியினைக் கொடுக்கப்போவதில்லை. மேலும், விடுதலைப்புலிகளின் தலைவர்மீது இந்தியாவினால் சுமத்தப்பட்ட கொலைக் குற்றச்சாட்டின் பின்னணியில் அரசியல் இருப்பது, விசாரணையில் அரசியல் தலையீடு இருப்பதாக தற்போது வெளிவரும் தகவல்கள் மூலம் தெளிவாகிறது.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போருக்கு தமிழகத்திலும் பெருகிவரும் ஆதரவு இந்திய ஆளும்வர்க்கத்தின் பலத்த கெடுபிடியையும் மீறி வளருகின்றமையையும் நாம் இங்கு கவனத்திற்கொள்ளமுடியும்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இந்திய எதிர்ப்பாளராகக் கணிக்கப்படுவதும் இந்தியா ஸ்ரீலங்காவுடன் இணைந்து செயற்படுவதற்கு வரையறைகளை இட்டுள்ளது.

இத்தகைய சூழலில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையினை நிராகரித்து, விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இந்தியா விரும்பும் விளைவுகளைக் கொடுக்கப்போவதில்லை. இந்தியாவினால் அதி உச்ச பட்சம் செய்யக்கூடியது ஒரு குறுங்கால நெருக்கடியினை ஏற்படுத்துவது மட்டுமேயாகும்.

இதற்கு இந்தியா தனது பொருளாதாரத்தைத் திறந்த பொருளாதாரமாக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்திருப்பதும் இந்தியாவின் சந்தையில் மேற்குலகத்திற்கு இருக்கும் ஈடுபாடும் இந்தியாவிற்குச் சாதகமாக அமையலாம்.

இருந்தபோதும், விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வரலாற்றின் இயல்பான வளர்ச்சிப்போக்கின்படி தோல்வியினையே தழுவிக்கொள்ளும். இதனால் நீண்டகால நோக்கில் சிந்தித்து தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகாரிப்பது இந்தியாவின் நலன்களுக்கும் நன்மை பயக்கக்கூடியது என்பதனை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் புரிந்து செயற்படவேண்டும்.

தமிழீழ மக்களின் உறுதியான போராட்டமும் எந்தவிதமான நியாயமான தீர்வுக்கும் வரமறுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதமும், மாற்றமுற்றுவரும் சாதகமான சர்வதேச சூழ்நிலைகளும் தமிழீழவிடுதலைப் போராட்டத்தினை வெற்றிக்கு இட்டுச்செல்லும் நிலைமைகளை உருவாக்கிக் கொண்டே உள்ளன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா அரசு இராணுவச் சமநிலை —ஒரு பார்வை

கடந்த வருடம் ஆனையிறவுச்சமர் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட BBCயின் கொழும்பு முகவர், இலங்கைத்தீவில் பலம்பொருந்திய இரண்டு இராணுவங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். யுத்தகளத்திற்கு வெளியே வெளியிடப்பட்ட இக்கணிப்பீடு தொடர்பாக ஆனையிறவுச்சமரில் (ஆ.க.வே. இராணுவ நடவடிக்கை) விடுதலைப்புலிகளுக்குத் தலைமை தாங்கிய தளபதி பொட்டு அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் ஆள், ஆயுதக்கணக்குகளின் எண்ணிக்கையில் அன்றி, போர்வலு என்ற அடிப்படையில் BBC

அர்ச்சுனா

நிருபரின் கருத்து இருக்குமானால் அது சரியானதே எனக் குறிப்பிட்டிருந்தார் (விடுதலைப்புலிகள் குரல் 25). விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா அரசின், இராணுவப்போர்த்திறனின் பரிசோதனைக்களமாக அமைந்த ஆனையிறவுச் சமரையொட்டி வெளியிடப்பட்ட இக்கணிப்பீடுகளும், கருத்துகளும் இரு தரப்பினதும் இராணுவ சமநிலைபற்றிய ஆய்வுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

## இராணுவச்சமநிலை பற்றிய ஆய்வின் முக்கியத்துவம்

போராட்டத்தின் ஒவ்வொரு காலப் பகுதியிலும் எதிரியின் பலம் பலவீனம் பற்றிய அறிவு போராட்ட வெற்றியின் இன்றியமையாத தேவைகளில் ஒன்று. எதிரி தொடர்பான இக்கணிப்பீடுகளுக்கேற்பவே போரிலீடுபட்டுவரும் இராணுவங்கள் தமது பயிற்சிகளையும், ஆயுதத்தளபாடங்களையும், தந்திரோபாயங்களையும் அமைத்துக் கொள்ளும். இவ்வளவீடுகளில் மாற்றங்கள் ஏற்படும் போதெல்லாம் தமது தரப்பிலும் இதற்கொத்த மாற்றங்களைச் செய்யவேண்டியுள்ளதால் இச்சமநிலைபற்றிய அளவீடுகள் தொடர்ச்சியாகவும் பல பரிமாணங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா அரச முரண்பாட்டைப் பொறுத்தவரை இச்சமநிலைபற்றிய ஆய்வுகள் மேற்சொன்ன வழமையான இவ்விராணுவக் கண்ணோட்டத்திற்கு மேலாக இன்று பல முனைகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டுவரும் ஈழப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வுத்திட்டங்களில் ஒவ்வொரு பகுதியினரின் நிலைப்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கும் பெரிதும் உதவும். ஏனெனில் இத்தகைய சமரசத்தீர்வு முயற்சிகளின்போது முன்வைக்கப்படும் தீர்வுத்திட்டத்தில் உறுதியாக இருப்பதற்கும், அரைகுறை தீர்வுகள் திணிக்கப்படாமல் தடுப்பதற்கும், இராணுவச்சமநிலையில்



தளபதி பொட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேம்பட்டிருத்தல் அல்லது தற்போதைய சமநிலையைத் தொடர்ந்து பேணல் விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை முக்கியமானதாகும். இதே மாதிரியான எதிர்க்காரணங்களின் அடிப்படையில் ஸ்ரீலங்கா அரசிற்கும் இது முக்கியமான விடயமே. ஆனால் ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் நலன்களைக் காக்கும் அமைப்பு என்ற ரீதியில் விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை இச்சமநிலை மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

## ஆனையிறவு, மணலாற்றுச் சமர்களும் இராணுவ சமநிலையும்.

தமிழீழ - ஸ்ரீலங்கா யுத்தம் மீண்டும் வெடித்தபின் அதன் போக்கு யாழ் கோட்டையைத்தவிர பெரும்பாலும் வன்னி மற்றும் எல்லைப் பிரதேசங்களை நோக்கியே இடம்பெற்றுவந்தன. கொக்காவில், மணலாறு, மாங்குளம் என இப்பிரதேசங்களில் இருந்த முக்கிய தளங்களின் வீழ்ச்சியுடன் இப் பிராந்தியத்தில் விடுதலைப்புலிகளின் கையோங்கியிருந்தது. இப்பின்னணியில் ஆனையிறவு விடுதலைப்புலிகளின் அடுத்த இலக்காக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு பரவலாகவே தென்பட்டதுடன் இதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளும் ஸ்ரீலங்கா அரசால் தீர்மானிக்கப்பட்டே இருந்தன.



வளைகுடாப் போரில் சரணடைந்த ஈராக்கிய இராணுவம்

போர்க்களங்களே ஒரு இராணுவ அமைப்பின் போர்த்திறனையும், பலத்தையும் பரிசோதிக்கக்கூடிய இடமாகும். வெறுமனே ஒரு இராணுவம் எவ்வளவு பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது என்பதைவிட, போர்க்கள அளவீடுகளே பலத்தினையும், திறனையும் அளக்கச்சிறப்பானது. உதாரணமாக, வளைகுடாயுத்தத்தின் போது பல்நாட்டுப்படைகளுக்கு பெருமளவு இழப்பை ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட ஈராக்கிய இராணுவம், பெரிதாக எதையும் சாதிக்காமலேயே சரணடைந்தது. வளைகுடா யுத்தம் நடை பெறாமல் இருந்திருக்குமானால் ஈராக்கிய இராணுவம் பற்றிய, அதன் போர்த்திறன் பற்றிய அளவீடுகள் மிகையானதாவே இருந்திருக்கும்.

இவ்வகையிலேயே ஆனையிறவு, மணலாறு யுத்தக்களங்கள் விடுதலைப் புலிகள் - ஸ்ரீலங்கா அரசின் இராணுவப் படைத்திறனை பரிசோதிக்கும் களமாக அமைந்தன. ஆனையிறவுச்சமரில் புலிகளின் தளத்தைக் கைப்பற்றும் முயற்சி வெற்றியளிக்காதபோதும், 31 நாட்களும் சிங்களப்படைகளுடன் நடத்திய நேரடி யுத்தத்தின் மூலமும், 8000 படைவீரர்களைக்கொண்ட அரச படைகளின் நவீன தளபாடங்களுக்கு மத்தியில் உச்ச எதிர்ப்பை வழங்கியதன் மூலமும் தமது போர்வலுவை, திறமையாகவே வெளிக்காட்டினர்.

ஆனையிறவுச்சமரைப்பற்றி அதிகளவில் விளம்பரப்படுத்திய ஸ்ரீலங்கா அரசு அதற்கு ஈடாகவே இடம்பெற்று முடிந்த மணலாற்றுச்சமரைப்பற்றியும் (Operation Lightning) அதில் புலிகளின் முகாமைச் சென்றடையமுடியாது புலிகளை "பலமிழக்கச் செய்தபின்" பாதியிலேயே தமது படைகளைத் திருப்பி அழைத்ததையும் மூடிமறைத்துக் கொண்டது. 29.08.91 இலிருந்து 26.09.91 வரை 28 நாட்களாக இடம்பெற்று முடிந்த இச்சமரில் ஆனையிறவை விட அதிகளவு பலத்தையும் வெடிமருந்துகளையும் ஸ்ரீலங்கா அரசு பிரயோகித்திருந்தது. பூகோளரீதியிலும் இராணுவரீதியிலும் மணலாற்றுப்பிரதேசம் ஆனையிறவுக்கு ஈடான கேந்திரமுக்கியத்துவம் கொண்டது என்ற ரீதியில் ஸ்ரீலங்கா அரசு பெற்ற இராணுவப் பின்வாங்கலும் இராணுவச் சமநிலை பற்றிய இவ் ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்ததே.

ஆக, கடந்த வருடம் ஒரேமாதிரியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இடம்பெற்று முடிந்த இவ்விரு சமர்களிலும் ஆனையிறவுத்தளத்தை அரச இராணுவமும், மணலாற்றுப் பிரதேசத்தை விடுதலைப் புலிகளும் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இச்சமர்களின் முடிவுகள் இராணுவச்சம நிலையில் எவ்வித மாற்றங்களையும் ஸ்ரீலங்கா அரசின் சார்பில் ஏற்படுத்தவில்லை. மாறாக, விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை இக்களங்கள் அவர்களை வெற்றிகொள்ள முடியாத சக்தியாக சர்வதேசத்திற்கும் இனம் காட்டியது.

இவ்விடத்தில் யாழ்ப்பாணத் தீவுப் பகுதிகளையும், குடாநாட்டில் சங்குப்பிட்டிப் பகுதியையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது இராணுவச் சமநிலையில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற கேள்வி எழுவது இயல்பானது.

கடல்சூழ்ந்த பெருவெளிப்பிரதேசங்களில் விடுதலைப்புலிகளை வலிந்து சண்டைக்கழைத்து, தனது முழுமையான படைக்கலச் சக்தியைப் பயன்படுத்தி நேரடிமோதல்கள் மூலம் போராளிகளைப் பலமிழக்கச் செய்தல் அண்மைக்காலமாக ஸ்ரீலங்கா அரசு கைக்கொண்டுள்ள யுத்ததந்திரோபாயமாகும். ஆனையிறவுச் சமரில் விடுதலைப்புலிகள் தரப்பிலேற்பட்ட குறிப்பிடத்தக்க இழப்பிற்கு வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு முகாம் வரை நீண்ட பெருவெளிப்பிரதேசங்களில் சண்டையை எதிர்கொண்டமையும் முக்கியமான காரணம்.

ஆளணி, ஆயுதக் கணக்கில் ஸ்ரீலங்கா அரசைப்போல பெரும் எண்ணிக்கையினைக் கொண்டிராத விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை எதிரியின் யுத்த தந்திரோபாயத்தைப் புரிந்துகொள்ளலும் அவ்விராணுவ வலைக்குள் சிக்காது தவிர்ப்பதும் முக்கியமானது. சங்குப்பிட்டி, தீவுப்பகுதிகள் இராணுவரீதியில் சாதகமான புவியியல் நிலைமைகளைக் கொண்டிராத பிரதேசங்கள். இங்கு புலிகளால் பின்பற்றப்பட்ட நேரடி மோதலைத் தவிர்க்கும் அணுகுமுறை இராணுவரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றுத்தந்திரோபாயம் என்றே கொள்ள வேண்டும். எனினும் நீண்டகால அடிப்படையில் இப்பிரதேசங்களை எதிரி கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் இலகுவானதல்ல.



## புலிகளின் பலமும் தொண்டமானின் சமாதான முயற்சியும்

ஆனையிறவுச் சமருக்குப் பின்னரே தொண்டமானின் சமாதான முயற்சி முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. ஈழப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வைக் காணும் தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாக தொண்டமானின் சமாதான முன்னெடுப்பை நோக்கிய புலிகள் அதில் காட்டிய ஆர்வம், ஸ்ரீலங்கா அரச இராணுவ மட்டத்தில் பரவலாகவே ஆனையிறவுச் சமருக்குப் பின்னர் புலிகள் பலமிழந்துவிட்டனர் என்ற மாயையை உருவாக்கியது. இக்காலப்பகுதியில் இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளும் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்களும் ஸ்ரீலங்கா அரசின் எண்ணத்தைத் தீவிரமாக்கியது.

விடுதலைப்புலிகளின் பலமென்பது உண்மையில் தனித்து ஆயுதங்களின் எண்ணிக்கையால் கட்டப்பட்டதல்ல. தளபதி பொட்டு அவர்கள் குறிப்பிட்டதைப்போல விடுதலைப்புலிகள் அமைப்பானது களத்தில் போராடும் வேளையில் எமது போராளிகளின் ஒப்பற்ற வீரத்தாலும், தியாகத்தாலும் வெளியாட்களால் நம்புவதற்கரிய போர்த்திறனுடன் செயற்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசபடைகளுடன் ஒப்பிடுகையில் ஆள், ஆயுதக் கணக்கின் அடிப்படையில் பெருமளவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடைவெளி உள்ளபோதும், மேற்சொன்ன போர்த்திறனாலேயே அரசபடைகளுடன் யுத்தத்தில் பெருமளவில் சாதனைகளைப் புரிந்துவரமுடிகின்றது.

இக்கருத்தை இந்தியப்படைகளுடன் விடுதலைப்புலிகள் நடத்திய யுத்தத்தை ஒப்பிடுவதன் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். ஆளணி, ஆயுதத்தளபாட, நிதி, பிரச்சாரத் தொடர்பு வசதிகளைப் பொறுத்த வரை பலநூறு மடங்கு பலம் வாய்ந்த இந்தியப் படைகளுடன் விடுதலைப்புலிகள் ஏறக் குறைய ஈடான இராணுவச் சமநிலையைப் பேணினார்கள். இவ் யுத்தம் ஒரு கட்டத்தின் பின் கொரில்லாப்பாணி யுத்த தந்திரோ பாயத்தை வரித்துக் கொண்டது உண்மை யேயெனினும், வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணச்சமர், மணலாற்றுச்சமர் (operation checkmate) என்பவற்றில் இந்தியப்படைகளுடன் புலிகளின் யுத்தம் நேருக்கு நேராகவே இருந்தது. இச்சமர்களில் பங்களாதேஷ் யுத்தத்தில் பயன்படுத்திய சகலவகையான ஆயுதங்களையும் (போர்விமானங்கள் தவிர்ந்த) இந்தியப்படைகள் பயன்படுத்தியிருந் ததாக அண்மையில் இந்திய இராணுவ ஆய்வாளரொருவர் தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆகவே தனித்து ஆளணி, ஆயுதத் தளபாட எண்ணிக்கையில் தனது படைத் திறனைக் கட்டியெழுப்பாத தன்மையில் மற்றைய மரபுவழி இராணுவங்களிலிருந்து தன்னை வேறுபடுத்தி இனங்காட்டும் விடுதலைப்புலிகளது போர்வலுவானது தனித்த ஒரு சமருடன் ஸ்ரீலங்கா கருதுவது போல் "முடிந்து" விடாது. ஆனையிறவுச்சமர் முடிந்து ஏறக்குறைய 7 மாதங்களாகியும் அன்றிருந்த அதே சமநிலையைத் தொடர்ந்தும் புலிகள் பேணிவருகின்றனர் என்பதே உண்மையாகும்.

## ஸ்ரீலங்காவின் இராணுவமயமாக்கலும் இன்றைய நிலையும்

ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவத்தை நவீன ஆயுததளபாடங்கள் மூலம் பலப் படுத்தும் முயற்சியில் தற்போது ஈடுபட்டு வருகின்றது. தற்போதைய இராணுவ சமநிலையை உடைத்து புலிகளை வெற்றி கொள்வதற்கு தனது முழு நிதிப்பலத்தையும் பாவித்து சீனாவிடமிருந்து T-81 ரக 'டாங்கி' களையும், F7 ரக நவீன குண்டுவீச்சு விமானங்களையும், கடற்படைக்கென நவீன டோரா படகுகளையும், செக்கோசிலவாக்கி யாவிடமிருந்து T-55 ரக 'டாங்கி'களையும், வாங்கிக் குவித்துவருகிறது. இந்தப் போர்த்தயாரிப்புகளுடன்தான் இன்று போராட்டத்தின் தளப்பிராந்தியமான குடாநாட்டில் பெரியதொரு படையெடுப்பை மேற்கொள்ளவும், 1987 ம் ஆண்டு வடமராட்சியைக் கைப்பற்றிய பாணியில் (operation liberation) முக்கியமான சிலபகுதி களையாவது கைப்பற்றுவதுமே ஸ்ரீலங்கா அரசின் தற்போதைய திட்டம்.

குடாநாட்டில் படைகளைக்குவிக்கத் தொடங்கிய கணமே அரசின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட விடுதலைப்புலிகள் தமது தரப்பிலும் பாரிய யுத்தத்தயாரிப்புகளை மேற்கொண்டதுடன் மக்களையும் இவ் யுத்தத்திற்குத் தயார்ப்படுத்தினர். இந்நிலையில் வடபகுதி மீதான படையெடுப்பின் ஆபத்தைப் புரிந்து கொண்டு அதனைப் பிற்போட்டுள்ள ஸ்ரீலங்காஅரசு இன்று, தாக்குதல் என்றும் தொடங்கலாம் என்ற ரீதியில் வெறும் உளவியல் யுத்தத்தை (psychological war) குடாநாட்டில் நடாத்தி வருகின்றது.

கிழக்கிலும் என்றுமில்லாதளவு அரச படைகள் பலமிழந்து வருகின்றன. தினமும் தொடரும் புலிகளின் தாக்குதல் களில் பெரும் இழப்புக்களைச்சந்தித்துவரும் ஸ்ரீலங்காப் படைகள் தமது ரோந்து நடவடிக்கை களையும் பெருமளவில் குறுக்கி வருகின்றனர். அண்மையில் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்திய வட கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ். கணேச நாதன் நிருபரின் கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையில் அம்பாறையில் உள்ள 10 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நான்கும், திருமலையில் உள்ள 11 பிரிவுகளில் மூன்றும், மட்டக்களப்பிலுள்ள 10 பிரிவுகளில் ஆறும் மட்டுமே அரசகட்டுப்பாட்டுக்குள் இருப்ப தாகக் கூறியது (ஆதாரம்/ வீரகேசரி 4-3-92) வடக்கில் புலிகளைப் பலவீனப்படுத்த புறப்பட்ட படைகள் கிழக்கில் எவ்வாறு பலமிழந்துள்ளன என்பதை தெளிவாக இனங்காட்டும். இவரின் கருத்துப்படி கிழக்கின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 58 வீதமான பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பது தெளிவாகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடாநாட்டில் படைகளைக் குவித்த நிலையில், கிழக்கில் "சாண் ஏற முழம் சறுக்கும்." இந்த ஆபத்தை ஸ்ரீலங்கா அரசு உணரத்தொடங்கியதும் வடபகுதி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதற்கு ஒரு காரணமாகும்.

ஸ்ரீலங்காவின் நவீன ஆயுதத்தளபாடக் கொள்வனவும் இராணுவ சமநிலையை மாற்றி அமைக்கும் அரசமுயற்சிக்கு உதவுவதாகத் தெரியவில்லை. இவ் நவீன ஆயுதங்களதும், விமானங்களதும் பாதுகாப்புடன் வவுனியாவில் பரீட்சிக்கப்பட்ட "வன்னி விக்ரம" முயற்சியும் அண்மையில் ஒன்பது நாட்களாக மணலாற்றில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையும் (Operatîon sixer) தென்பகுதி சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் நாளாந்த பத்திரிகை அறிக்கைகளுக்கு மட்டுமே உதவியுள்ளன. இச்சண்டைகளில் ஆறு கவசவாகனங்கள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப்புலிகளின் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் ஸ்ரீலங்கா அரசின் அடுத்த கட்டநகர்வு எப்படியிருக்கும் என்பதே இன்றைய கேள்வி. ஈழத்தமிழரின் நியாயமான உரிமைகளை அங்கீகரித்து, சமாதான வழிகளில் இவற்றிற்குத் தீர்வு காண விரும்புகின்றதா? அல்லது தொடர்ந்தும் இராணுவப்பலப்படுத்தலில் ஈடுபடப் போகின்றதா? ஏற்கனவே 1991 ம் ஆண்டு 16,7 பில்லியன் (1670 கோடி ரூபாய்) ரூபாய் விழுங்கியுள்ள பாதுகாப்புச் செலவீனங்களால் எவ்வித இராணுவ ரீதியான முன்னேற்றமும் காணாத ஸ்ரீலங்கா அரசின் நவீன இராணுவப் பலப்படுத்தல் வெற்றியளிக்குமா என்பது கேள்விக்குறியே.

**"சீனாவிடமிருந்து ஸ்ரீலங்கா அரசு தாங்கிகளையும் விமானங்களையும் வாங்கிக் குவிக்கலாம். ஆனால் விடுதலைப்புலிகளிடமுள்ள அந்த மனவுறுதியையும், அர்ப்பணிப்பையும் எந்த அரசிடமிருந்தும், என்னவிலை கொடுத்தும் வாங்க முடியாது."**

**-விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி பொறுப்பாளர் மாலினி (மாவீரர்நாள் உரை).**

## அயல்

நெவாடாக் கொடுமணலில்
வெடிக்கும் அணுக்குண்டுகள்
என் அயலிலும் கூட

எனினும்
புழுதியுள் புகைக்குள்
முகத்தினை மறைக்குதே மனிதம்

நேற்றும் முன்னமும்
ஹிரோஷிமா நாகசாகி
வியட்நாம் வழிவந்த
பெருச்சாளியின் பேரர்கள்
அலறக் குளற இழுத்துச்
சென்றனர்.

இன்றும் நாளையும்
யாரென்பதல்ல
எத்தனை என்பதே கேள்வியாய்
நிற்க
கொக்கட்டிச் சோலையிலும்
வன்னி வயல்வெளியிலும்
துண்டுதுண்டாய்த் துடித்த
தமிழரின்
"மைலாய்" குரல்கள்
என் நெஞ்சினைப் பிளக்கும்
வெஞ்சினம் வளர்க்கும்.

எனினும்,
என் பொல்லா அயலோ
கச்சையை அவிழ்த்து
கண்களைக் கட்டும்
செத்தவன் யாரோ
அயலாரானென
அடிக்கமுழவும்

ஆமைகள் இதுகள்
வெளியினில் தலையினை
நீட்டவே நீட்டா

- மு.நேமிநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்த் தேசிய விடுதலைச்சிந்தனையின் பரிணாம வளர்ச்சி

## பற்றிமாகரன்

கி.பி 1621 வரை சுதந்திரமாக இருந்து வந்த யாழ்ப்பாண அரசு 1621 இல் போர்த்துக் கேயாிடம் தனது இறைமையை இழந்தது. ஆயினும் போர்த்துக்கேயர்கள் தமது வணிக வளர்ச்சிக்குத் தாம் கைப்பற்றிய பிரதேசங் களின் மூலப்பொருட்களை ஒன்றுதிரட்டு வதிற்தான் அதிகஅக்கறை காட்டினார்களே யொழிய தமது ஆட்சியை நிறுவுவதில் அதிக அக்கறை காட்டவில்லை. இதே பாணியையே டச்சுக்காரரும் 1656 முதல் 1796 வரை கடைப்பிடித்தனர். இதனாலேயே பிரித்தானி யரின் வருகையின் பொழுது வன்னிப் பிர தேசம் பண்டாரவன்னியனென்னும் குறுநில தமிழ்மன்னனின் ஆட்சியின் கீழ் பூரண இறைமையுடன் காணப்பட்டது. பண்டார வன்னியனே தமிழ்த் தேசியத்தின் முதலாவது இனங்காணக்கூடிய வடிவமாகத் திகழ்கிறான். 1802 முதல் 1832 இல் பண்டாரவன்னியனைக் கற்சிலைமடுவிற்கருகில் தோற்கடிக்கும் வரை ஏறத்தாழ 30 ஆண்டுகள் சூரியன் அஸ்த மிக்காத ராச்சியத்தை ஆண்ட பிரித்தா னியர்கூட பண்டாரவன்னியன் என்னும் தமிழ்மன்னனின் பதுங்கித் தாக்கும் தாக் குதலை சமாளிக்கமுடியாமல் திணறியு ள்ளனர் என்பது தமிழ்த்தேசியத்தவரின் வீரத்திற்குப் பெருமைதரும் வரலாற்றுக் குறிப்பாகும். 1832 இல் பண்டாரவன்னி யனைத் தோற்கடித்தபின்பே 1833 இல் இலங்கை என்னும் ஒற்றையாட்சிமுறையின கீழ் தமிழ்ச் சிங்களத் தனியரசுகளை ஒன்றுசேர்த்தனர். எனவே 1833 இல் தான் தமிழீழத்தின் இறைமை ஒட்டுமொத்தமாக பிரித்தானியாிடம் சென்றது.

ஆயினும், பிரித்தானியர் ஆரம்ப முதலே சிங்கள, தமிழ் என இரண்டு தேசிய இனங்கள் இலங்கையில் காணப்பட்டன என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டிவந்தனர். 1813 ஜூலை 10ம் நாள் தேதியிட்டு அன்றைய பிரித்தானிய கவர்ண ராக இருந்த சேர். றொபேர்ட் பிரவுண் ரிக்கால் காலனித்துவநாடுகளின் காரியதரிசிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் "தமிழ்மொழி போர்த்துக்கேசியத்துடன் கலப்புற்றநிலையில் எல்லா மாகாணங்களிலும் பேசப்பட்டு வருகிறது. இம்மொழியே புத்தளம் மட்டக் களப்புப் பகுதிகளை உள்ளடக்கி வடக்கு மாகாணம் வரையுள்ள இந்நாட்டு மக்களின் தாய்மொழி. எனவே, இலங்கையில் தமிழுக் கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து வழங் கப்படல் வேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே பிரித்தானியர் தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றுத்தொடரையும் தனித்து வத்தையும் நன்கு உணர்ந்திருந்தனர்.

ஆயினும் இந்நேரத்தில் 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் தெற்காசியா முழுவதும் ஒரு பொதுப்பண்பு தோற்றம் பெற்றது. அந்நியருக்கு எதிரான உணர்வானது பண்பாட்டு மீட்டுணர்வு, சமயமறுமலர்ச்சி என்னும் இரு துறைகளூடாகவே வெளிப் படத்தொடங்கியது. இந்தப் பொதுப் பண்பின் தாக்கமாக தமிழீழத் தமிழாிடையில் ஆறு முகநாவலர் தோற்றம் பெற்றார். இவரே தமிழ்த்தேசியத்தின் தந்தையாகவும் திகழ் கிறார். நாவலர் சைவ சித்தாந்தப் பாரம்பரிய மரபைப் புதுப்பிக்கும் நோக்கினை நிறை வேற்றியபொழுது ஒரு கல்லில் இரண்டு மாங் காயென சமய மறுமலர்ச்சியும், பண்பாட்டு மீட்டுணர்வும் பலம்பெற்றன. சுவாமி விபுலா னந்தர், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றவர் களும் தமிழ்த்தேசியத்தை உருவாக்கும் பணியில் அறிவு சார் நிலையில் மிகப்பெரிய பணிகளைச்செய்தனர். நாவலர் தமிழ்த் தேசிய உணர்வினைத் தூண்டிய வகையில் தமிழ்த் தேசியத்தின் தந்தையாகத் தோற்றம



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளிக்கின்ற போதும் நாவலரில் காணப்பட்ட சமயப்பற்று ரீதியான சாதியத்தன்மை அவரை உயர்குலத் தமிழர்களின் பிரதிநிதியாகவே காட்டியது. அத்துடன் தென்தமிழீழத் தமிழர்களாகிய கிழக்கு மாகாணத் தமிழர்களை ஒதுக்கியமையினால் குறிப்பாக மட்டக்களப்பு மக்களின் குலதெய்வ வழிபாட்டுமுறையை ஏற்றுக்கொள்ள மறுத்தமையால் மட்டுநகர் மக்களுக்கான தனியான ஓர் தேசியத் தலைவரின் தேவை ஏற்பட்டது. இதனை சுவாமி விபுலாநந்தர் நிறைவேற்றினார். சமய சமரசம், சாதிய எதிர்ப்பு, தமிழுணர்வு, பண்பாட்டு மீட்டுணர்வு என்பவற்றில் சுவாமி விபுலாநந்தர் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்ததுடன் தமிழாசிரியர் சங்கத்தை உருவாக்கியதன் மூலம் முதல் மொழி வழித் தொழிற்சங்கத்திற்கும் வித்திட்டார்.

இதே வேளை யாழ்ப்பாணத்தில் சமய சமரசத் தன்மை காணப்படாத நிலையில் சுவாமி ஞானப்பிரகாசர் கிறிஸ்தவ மதத்தினூடாக தமிழ்த் தேசியத்தை வளர்க்கும் பணியைச் செய்தார். இவர் பிற மொழிகளுடனும், பிற இன வரலாறுகளுடனும் கொண்டிருந்த அறிவியல் தொடர்புகளின் காரணமாக ஒப்பீட்டு ஆய்வுகளை வளர்த்ததுமல்லாமல் தமிழே உலகின் முதன்மொழியென அறிவியல் ரீதியாக வெளிப்படுத்தியும் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணநூல் மற்றும் சொற்களின் உருவாக்கம் பற்றிய நூல்களை எழுதியும் தமிழ், தமிழ்த்தேசியம் என்ற உணர்வுகளுக்கு புத்துணர்வூட்டினார். அதேவேளை சாதியத் திற்கெதிராகக் கடுமையாக உழைத்து, தீண்டத் தகாதவர்களின் பெரியசாமியார் என கிண்டல் செய்யப்படுமளவிற்கு தன் செயலால் சாதியத்தைப் புறங்காணச்செய்தார்.

இவ்விதமாக கலாச்சார மறுமலர்ச்சியூடாகத் தமிழ்த் தேசிய உருவாக்கல் உறுதிபெறத் தொடங்கிய வேளையில் அரசியல் ரீதியாகத் தமிழ் மக்களின் தலைமை தமிழரிடையே காணப்பட்ட மேற்தட்டுவர்க்கத்தினரிடையே சென்றடைந்திருந்தது.

ஆங்கில அறிவினையும், தமது பாரம்பரிய நிலைகளையும் பயன்படுத்தித் தமிழ் மக்களின் தலைமைத்துவத்தை ஏற்றிருந்த இந்த மேற்தட்டுவர்க்கத்தினர் இனமான உணர்வை விட தமது வர்க்க உணர்வுகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். இதனால் இவர்களால் தமிழ்த் தேசியத்தையும் சிங்களத்தேசியத்தையும் வேறுபடுத்திப்பார்க்குமளவிற்கு இனமான உணர்வு காணப்படவில்லை.

ஆங்கிலேயர்களும் இலங்கையில் படித்தவர்களுக்கு வாக்குரிமையை வழங்கியதன் மூலம் இலங்கையின் *mass crowud* என்று சொல்லக்கூடிய சிங்கள- தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தி தமது போக்கிற்கு இயையக்கூடிய ஆங்கிலக் கல்வி கற்ற மேற்தட்டுவர்க்கத்தினர் மேலெழுந்து அரசியற் தலைமைத்துவத்தை ஏற்கக்கூடியவாறு செயற்பட்டனர்.

இதற்கிடை அந்நியராட்சிக்கு எதிரான நிலைப்பாடு ஒன்றை உருவாக்கவேண்டிய தேவை இருந்ததனால் இரு இனங்களான சிங்கள-தமிழ் இனங்களுக்கிடையில் அரசியல் ரீதியான ஒற்றுமை காணப்பட்டமை வரலாற்றுத் தேவையால் உருவாக்கப்பட்டதென்றும் கூறலாம்.

எது எப்படியிருப்பினும் தமிழ்-சிங்கள தேசிய இனங்கள் தம்மிடை இனப்பகைமை பாராட்டாத நிலையில் தனித்தனிப் பாணியிலான வாழ்க்கை முறைமைகளுடன் இயங்கினவென்பது உண்மையே. இதனால் தான் தமிழர்களுக்கென தனியானவொரு ஆட்சிச் சபை தேவையென்று 1926, 1927 இல் இலண்டன் பட்டதாரியாக நாடு திரும்பிய S.W.R.D பண்டாரநாயக்கா கூறியபொழுது அவரின் சமஷ்டிக் கோரிக்கையின் நோக்கினை உணர்ந்து கொள்ளும் முன்யோசனையற்றவர்களாக அவரால் முன்மொழியப்பட்ட கண்டி-கரையோரச் சிங்களவர்களுக்கு இருசபைகள், தமிழர்களுக்கு ஒரு சபை என்ற அமைப்பிலான சமஷ்டி முறையை நிராகரித்தனர். இதற்கு 1920 இல் சேர். பொன். இராமநாதன் படித்த இலங்கையரின் பிரதிநியாக தெரிவு செய்யப்பட்டதும், அத்தேர்தலில் சிங்களவர் ஒருவரைத் தோற்கடித்தமையும், சேர். பொன். அருணாசலம் இலங்கை தேசிய காங்கிரஸின் தலைவராக சிங்களவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் காரணங்களாக இருந்தன.

தமிழர்கள் தமது தேசியத் தன்மைக்கும் சிங்களத் தேசியத் தன்மைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளின் கூர்மை நிலையை உணராது "இலங்கைத் தேசியம்" என்ற ஒன்றுள் இரு தேசியங்களும் இணையலாம் என்ற தவறான போக்கினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரலாற்று நிலைப்பாடாக எடுத்திருந்தனர். இவ்வேளையில் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் இனக்கலவரத்திலும் (1915) தமிழ்த்தேசிய இனம், தான் இன்னுமொரு தேசிய இனமாக மதித்த சிங்களத் தேசிய இனத்தின் மீது நம்பிக்கை காட்டி அவர்களுக்குச் சார்பாக நடந்துகொண்டமை ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. இரு தேசிய இனங்களின் நீண்டகால அன்புறவின் வெளிப்பாடு. இத்தகைய நிகழ்வு பின்னர் இந்திய-பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டங்களின் போதும் வெளிப்பட்டது. தனது மொழியையும் தனது கலாச்சாரத்தையும் கொண்டிருக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் வெளியேற்றத்தின்போது இலங்கைத் தமிழினம் போராட்ட உந்தல்களுக்கு ஆளாகாமல் மௌனமானதன் காரணமும் சிங்கள தேசிய இனத்தைத் தனது தமிழ்த் தேசிய இனத்துடன் சேர்த்து இலங்கைத்தேசியத்தை உருவாக்கலாம் என தமிழ்த்தலைவர்களிடையே காணப்பட்ட சிந்தனையே எனலாம். இதற்கிடையே 1920 களை அடுத்து மனிங் சீர்திருத்தத்தின் மூலம் தமிழர்களின் பிரதிநிதித்துவம் சட்டவாக்கசபையில் குறையத்தொடங்கியதும் சிங்களத் தேசிய இனம் எண்ணிக்கை ரீதியாக தான் பெரும்பான்மை நிலையில் இருப்பதை உணரத்தொடங்கியது.

அத்துடன் பிரித்தானிய அரசு ஆரம்ப காலகட்டங்களில் தமிழர்களுக்கு ஆதரவளித்தபோதிலும் தமிழர்கள் இந்தியர்களுடன் காட்டிய ஒருவகைச் சகோதர உறவுநிலையையும் அதன்மூலம் இந்தியத்தேசிய காங்கிரஸின் விடுதலை உணர்வுகள் இலங்கையில் சிங்களவர், தமிழரிடையே வளரத்தொடங்குகிறது என்பதையும் இனங்கண்டது. ஹன்ரி பேரின்ப நாயகத்தின் செயற்பாடுகள், காந்தீயத்தின் யாழ்ப்பாண எழுச்சிநிலை போன்றவைகள் இலங்கை இந்தியாவுடன் இணைந்து பிரித்தானியாவுக்கு மாறாக மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டென்பதைக் காட்டியது. இதனால் அபாய எச்சரிக்கை நடவடிக்கையாக, அதுவரை சிங்கள தேசிய இனத்தையும், தமிழ்த் தேசிய இனத்தையும் சரிவர ஒப்புநோக்கிய பிரித்தானிய அரசு மெதுவாக சிங்களத் தேசியத்தை சிங்களப் பேரினவாதமாகத் தூண்டத் தொடங்கியது. இதற்குச் சாதகமாக சட்டவாக்கசபையிலிருந்த தமிழ்ப்பிரதிநிதித்துவ விகிதத்தைத் திட்ட

## தனிமை

எங்கோ
இருளில்
அழும் குழந்தை
பின்னணியில்
நாயொன்று ஊளையிடும்

இங்கே
இருள்
மனதில் படியும்

சென்ற பலவும்
திரும்பும்

திகில் கொடுக்கும்

முந்தை வினையும்
முளைக்கும்
முகில் நீட்டில் திரியும்
சொந்தம் அகலும்
துயர் படியும்

எந்தை
நினைவில்
எதிர்வார்.........

—என்.கே.மகாலிங்கம்

www.tamilarangam.net



மிட்டு வேண்டுமென்றே குறைக்கத் தொடங்கினர்.

அத்துடன் ஆசியாவிலேயே முதற் தடவையாக 1931 இல் சர்வஜன வாக்குரிமையை அறிமுகப்படுத்தி தாம் செய்ய நினைத்த கைங்காரியத்தை அதாவது தமிழ்த் தேசியத்தினூடாக வளரமுற்பட்ட இந்திய சுதந்திர வாடையைப் போக்குதல், சிங்களப் பேரினவாதத்தை வளர்த் தெடுப்பதன் மூலம் எக்காலத்திலும் இலங்கை இந்திய இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாமற்செய்தல் என்ற நோக்குகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொண்டனர். சிங்களத்தலைவர்களும் தமக்கு பிரித்தானிய அரசு அளித்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமது இனத்தை இலங்கையின் ஆளும் இனமாக உருவாக்கி தமிழர்களின் பிரதேசங்களிற்கூட தமது பெரும்பான்மையூடாக ஆட்சியுரிமையைப் பெறுவதற்கான முயற்சிகளில் இறங்கினர்.

1930களை அடுத்து சிங்களப் பேரினவாதப் போக்கினை தமிழ்த்தலைவர்கள் இனங்கண்டபோதிலும் அவர்களால் அண்டைநாடான இந்தியாவின் ஏழ்மை நிலையினாலும் தமிழகத் தமிழர்களைத் தமது தேசிய இனத்தின் நீடிப்புகளாக நினைத்துக் கூடப் பார்க்கமுடியவில்லை. இதற்குக் காரணம் "யாழ்ப்பாணத்தவர்கள்" என வர்ணிக்கப்பட்டவர்களிடையே காணப்பட்ட முதலாளித்துவ மேலோங்கு சிந்தனைகளே எனலாம்.

தமிழ்த் தேசியமானது பண்பாட்டுமீட்டுணர்விற்கூடாக தோற்றம் பெற்றதையடுத்து, மக்களிடையே தமிழ்மொழிமேல் தனியான பற்று ஏற்படத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் மக்களின் இந்தத் தமிழுணர்வை ஒழுங்குபடுத்தி இயக்கசக்தியாக மாற்றாது அரசியற் தன்மையுள்ளதாக மாற்றுவதிலேயே மக்களிலிருந்து வேறுபடுகின்ற சிறுமுதலாளித்துப்போக்கிலான தமிழ்த் தலைவர்கள் முயன்றனர். இவர்களுக்கு இக்காலகட்டத்தில் உலகில் எழுந்த இடதுசாரித்தன்மையான போக்கினைக் கிரகிக்கமுடியாததினால் ஒரு சர்வதேசத் தன்மையான விடுதலையுணர்வை கட்டியெழுப்பமுடியவில்லை; விரும்பவுமில்லை. மாறாக இச்சந்தர்ப்பவாதிகள் மகஜர்களூடாக ஆங்கிலத் தலைமையுடன் அரசியற் பேரம் பேசுவதிலேயே தமது காலத்தைக் கடத்தினர்.

இதனால் போர்த்தன்மையற்ற தமிழ்த் தலைமையை இலகுவாக உருவாக்கும் ஆற்றலை ஆங்கில-சிங்களத் தலைவர்கள் கொண்டிருந்தனர். மேலெழுந்துநின்ற சிறுமுதலாளித்துவத் தமிழ்த் தலைமையை அத்தலைமை திருப்தியடையும் வகையில் சில சலுகைகளை வழங்குவதன்மூலம் வென்றெடுக்கும் வலிமையைப் பெற்றிட்ட ஆங்கிலத் தலைமை டொனமூர், சோல்பரி யாப்புகளின் மூலம் சிங்களவர்களின் கையில் ஒட்டுமொத்தமாக இலங்கையின் ஆட்சியைக் கையளித்தனர். டொனமூர் யாப்புமூலம் ஆரம்பமான தமிழ்ப்பிரதிநிதித்துவக் குறைப்பானது சிங்கள மந்திரிசபையைத் தோற்றுவிக்க, சோல்பரி யாப்புமூலம் தமிழர்களின் இறைமை சிங்களவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இந்நேரத்தில் தமிழ்த் தலைமைத்துவத்தைச் சாரிப்படுத்தும் வகையில் இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கெதிரான சட்டம் பாராளு



மன்றத்தில் உருவாக்கப்பட்டால் பிரித்தானிய மகாராணி தலையிடலாம் என்ற சோல்பரி யாப்பின் 29வது ஷரத்து விதியை பிரிட்டிஷார் இணைத்துக்கொணடனர். இதனால் தமிழர்களின் இறைமை பிரித்தானியரிடமும் ஆட்சியுரிமை சிங்களவர்களிடமும் சென்றடைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்காலகட்டத்தில் 1950 களில் உலகவங்கியானது இலங்கையின் கன்னிநிலங்கள் மீது தனது பார்வையைப் பதித்தது. இதனால் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக பராக்கிரமபாகு சமுத்திரம், கல்லோயா, அல்லை, கந்தளாய் போன்ற பகுதிகளில் உள்ள நீர்வளத்தைப் பயன்படுத்தி அப்பகுதிகளில் விவசாய வளர்ச்சியைத் துரிதப்படுத்தும்படி உலகவங்கி ஆலோசனை வழங்கியது.

இதனை ஆளும் சிங்களத் தலைமைகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமது ஆதிக்க விஸ்தீரணத்தைத் தொடங்கின. பட்டிப்பளை ஆறு பாய்ந்த அம்பாறைத் தமிழ்ப்பகுதி பொலநறுவையுடன் சேர்ந்த சிங்களப்பிரதேசமாக்கப்பட்டது. கந்தளாய்,



அல்லை போன்ற குடியேற்றத்திட்டங்கள் கிழக்கில் தமிழ் நிலப்பரப்பை விழுங்கியது. இதனால் பாடல்பெற்ற திருத்தலமாகிய திருகோணமலை சிங்களப்பூமி எனுமளவிற்கு மோசமடைந்தது.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாண சிறுமுதலாளித்துவ தமிழ்த் தலைமைத்துவம், இந்த கிழக்கிலங்கை மக்களை மறந்த நிலையில் தனது பிரதேசத்தில் ஒருசில தொழிற்சாலைகளைத் திறப்பதற்காகச் சிங்களத் தலைமைத்துவத்துடன் ஒட்டி உறவாடிக்கொண்டிருந்தது.

இவ்வாறு யாழ்ப்பாண முதலாளித்துவ தலைமைத்துவம் தனது பொருளியல் நோக்குகளை மையப்படுத்தி இயங்குவதை உணர்ந்த சிங்களத் தலைவர்கள் இந்தியர்கள் இலங்கையைச் சுரண்டுகிறார்கள் என்ற சாக்கில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டம் என்ற பெயரில் ஊவா மாகாணத்தின் குடியேற்றவாசிகளாகக் காணப்பட்ட இந்தியத் தமிழர்களுக்கெதிரான பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தனர். இதன் இனரீதியான பாதிப்பை உணராத தமிழ்க்காங்கிரஸ் இதனை ஆதரித்து இலங்கை மண்ணிலே ஒரு தொகுதி தமிழர்களை நாடற்றவர்களாக்கியது.

இந்நிலையில் அதுவரை தமிழ்க் காங்கிரஸில் செயற்பட்ட அமரர் சா. ஜே. வே செல்வநாயகம், இந்தப் பெருந் தோட்டத் தமிழர்களுக்கெதிரான நடவடிக்கைகளை எதிர்த்து தமிழ்க்காங்கிரஸிலிருந்து ராஜினாமாச் செய்தார். 1949 இல் தமிழரசுக் கட்சியைத் தொடங்கினார். இந்த "தமிழரசு" எனும் சொல் அதுவரை ஆங்கிலம் கற்ற கனவான்களிடம் ஆட்சியுரிமையைக் கையளித்துவிட்டு தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கச் சக்தியற்றுநின்ற பெருந் தொகையான தமிழ்மக்களுக்கு ஒரு உந்துதலை அளித்தது. அதுவும் விவசாய நில ஆக்கிரமிப்பாலும் மீன்பிடிக் கடல் ஆக்கிரமிப்பாலும் சிங்கள சமூகத்திடம் கசப்புணர்வு கொண்டிருந்த கிழக்குமாகாணத் தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சியில் வேகமாகச் செயற்பட்டனர்.

அவ்வாறே கோப்பாய் வன்னியசிங்கம் அவர்கள் சாதியத்திற்கு எதிராக ஆத்மார்த்த ரீதியான இதயசுத்தியுடன் செயற்பட்டதால் வடக்கிலும் சிறுபான்மையினம் எனத் தமிழராலேயே தள்ளப்பட்ட பெருந்திரளான மக்களுக்கு தமிழரசுக்கட்சியைச் சரியான தலைமையாக எண்ணவைத்தது.

ஆயினும் 1952இல், யாழ். குடாநாட்டிற்குள் தமிழரசுக்கட்சி பாராளுமன்றத் தேர்தல்களில் படுதோல்வியையே தழுவியது. எனினும் கிழக்குமாகாணம் தமிழரசுக் கட்சியின் காலை அகலப்பதிய இடம் கொடுத்தது.

1956இல் பண்டாரநாயக்காவால் தனிச்சிங்களச் சட்ட அமுலாக்கம் செய்யப்பட்டதும், நடுத்தரவர்க்கத்தினரான தமிழர்கள் பெரும்பாதிப்பிற்குள்ளாகினர். இதனால் பெரும்பாலும் எழுதுவினைஞர்களாகக் காணப்பட்ட இந்நடுத்தர வர்க்கத்தினர் தமிழரசுக்கட்சியுடன் பெரு மளவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இணைந்துகொண்டனர். இந்த நடுத்தர வர்க்கத்தின் அரசியல் எழுச்சி யானது விவசாய, தொழிலாள, மாணவர் அமைப்புக்களின் மேல் கருத்தியற் செல் வாக்கின் மூலம் தமிழரசுக்கட்சியின் "சமஷ்டிக் கோரிக்கைக்கு" பலத்த ஆதரவைத் தேடிக் கொடுத்தது.

இக்காலகட்டத்தில் அதுவரை ஒற்றையாட்சியின் கீழ் கொழும்புச் சிங்களத் தலைமையுடன் நல்லுறவை வளர்த்த தமிழ்க் காங்கிரஸிற்கு சாதாரண தமிழ் மக்களின் எழுச்சியும், சிங்களத்தலைமையுடன் பகையும் விரும்பப்படாத ஒன்றாக அமைந்தது. எனவே தமிழ்க்காங்கிரஸ் தனது முழுச் சக்தியையும் தமிழரசுக்கட்சியை எதிர்ப்பதி லேயே செலவிட்டது.

1958 இல் ஏற்பட்ட இனக்கலவரமானது ஒற்றையாட்சியின் மீதான சந்தேகத்தை நிரூபித்தது. இதனால் 1958ஐ அடுத்து தமிழ்க்காங்கிரஸின் அரசியற்பித்தலாட்டத் தன்மையை இனம் கண்ட தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சியை வளர்க்கத்தொடங்கினர்.

ஆயினும் தமிழரசுக்கட்சி சொல்ல ளவில் போர்த்தன்மையையும் செயலளவில் முன்னைய போலவே பேச்சுவார்த்தை, மகஜர்களூடனான தீர்வுநிலையை நெருங்கும் நிலையைக் கொண்டிருந்தனர். இந்த முன்னுக்குப் பின் முரண்பாடான நிகழ்வைச் சமப்படுத்துவதற்கு "அகிம்சைவழி" என்ற ஆயுதமே தமிழரசுக்கட்சிக்கு உதவியது. பல்வேறு வரலாற்று நிகழ்வுகளுக்கூடாக உருவான இந்திய விடுதலை, காந்தியத்தின் வெற்றி என்ற மாயை இந்தியாவில் பரப்பப்பட்டு அதன்மூலம் இந்திய மக்கள் போர்க்குணம் கொண்டு, இந்திய முதலாளித்துவப் பாணித் தலைமைத்துவத்தைச் சிதைக்கக்கூடிய புரட்சிகளை முன்னெடுக்காமல் தடுக்கப் பட்டது. இந்தக் காந்தீய மாயை சிறுமுத லாளித்துவ பாணியில் வளர்ந்து பின்னர் தமிழ் விவசாய, தொழிலாள, நடுத்தரவர்க் கங்களுக்காகப் பேச முற்பட்ட தமிழரசுக் கட்சியால் பின்பற்றப்பட்டது.

இதனால் 1960 களில் அகிம்சைப்போர் என்ற பெயரில் தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்ப்புணர்வானது மாபெரும் சத்தியாக் கிரகப் போராட்டமாக வெளிப்பட்டது. மூன்று மாதங்கள் தொடர்ந்து நடந்த இப்போராட்



டமானது சிங்கள அரசின் ஆட்சியை தமிழ்ப்பகுதிகளில் தடுத்துநிறுத்திய முத லாவது போராட்டமாக மாறியது. இப்போராட் டத்தை பாதுகாப்புப்படைப்பலத்தால் முறி யடித்த இலங்கைச் சிங்கள அரசு தொடர்ந்தும் ஆயுதபலத்தால் அடக்கியாளலாம் என்னும் ஓர் நிலைக்கு வந்தது. அதேவேளை தமிழ்த்தலைமைத்துவத்தைப் பேரம் பேசுவதன்மூலம் வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்ற முடிவையும் சிங்கள அரசு செயற்படுத்தத்தொடங்கியது. இதன் உச்சக்கட்டமாக 1965 இல் டட்லி சேனநாயக்காவின் ஆட்சியில் திரு. மு. திருச்செல்வம் தமிழரசுக்கட்சி சார்பான மந்திரியாக நியமிக்கப்பட்டு போலியான தமிழ்ச்சிங்களத் தலைமைத்துவ உறவுநிலை சிருஷ்டிக்கப்பட்டது. இக்காலகட்டத்திலேயே தென்தமிழீழம் தமிழரசுக்கட்சியின் எதிர்ப்பின்றிப் படுவேகமாக சிங்களமய மாக்கப்பட்டது. அடையாள அட்டைமுறை இக்காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. பலாலி இராணுவமுகாம் உட்பட பல இராணுவ முகாம்கள் கள்ளக்கடத்தல், கள்ளத்தோணி தடுப்புக்கென்ற பெயரில் அமைக்கப்பட்டன. இவ்வாறாக தமிழரசு-யூ.என்.பி தேனிலவுக் காலத்திலேயே தமிழீழத்தை அடிமைப்படுத் துவதற்கான அடித்தளம் கெட்டியாக அமைக் கப்பட்டது.

1970களில் அறிமுகம் செய்யப்பட்ட தரப்படுத்தலானது தமிழ் மாணவர்களுக்கு கல்வியுரிமையை மறுக்கும் முயற்சியாக




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைந்தது. இதனால் தன்னல நோக்கற்ற இளம் தமிழ்ச் சமுதாயமானது தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கவேண்டும் எனும் உணர்வுக்கு வந்தது.

தமிழ்த்தேசியமானது போர்க்குணமாக மாறுவதற்குரிய சாத்தியக்கூற்றை 1972 அரசியல் அமைப்புத் தோற்றுவித்தது. அதுவரை பிரித்தானிய மகாராணியையே தனது தலைவியாகக் கொண்டியங்கிய இலங்கையரசு, கோடீஸ்வரனை சிங்களம்



தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF THAMIL EALAM

25th April 1978

TO WHOM IT MAY CONCERN

The founder name of the organisation Tamil NEW TIGERS (T.N.T.) was changed on 5-5-76 and the new name is LIBERATION TIGERS OF TAMIL EALAM. We claim responsibility for the following deaths.

1. Mr. Alfred Duraiappah (Mayor for Jaffna, S.L.F.P. Organiser Northern region. Shot Dead.
2. Mr. N.Nadarajah (Proprietor Petrol Garage, Urumpirai, and S.L.F.P. Organiser Kopay (Bombed)
3. Mr. A. Karunanithi (C.I.D. Police K.K.S.) Shot dead.
4. Mr. Shanmuganathan (C.I.D. Police. K.K.S.)Same day shot dead.
5. Mr. Shanmuganathan (C.I.D. Police V.V.T.)
6. Mr. Thangarajah (Sec. of the former S.L.F.P. M.P. Nallur Mr. Arulampalam)
7. Mr. C. Kanagaratnam (MP for Pottuvil former T.U.L.F. and present U.N.P.)
8. Mr. Bastiampillai (C.I.D. Inspector of Police)
9. Mr. Perampalam (C.I.D. Sub- Inspector of Police)
10. Mr. Balasingam (C.I.D. Sergeant of Police)
11. Mr. Siriwardene (C.I.D. Police Driver).

The Bastiampillai Party came in search of LIBERATION TIGERS of TAMIL EALAM about 6 a.m. on 7th April, 1978 with S.M.G., shot gun, Revolvers and Pistol, and attacked Tigers but the Tigers destroyed them without any death or body injury to Tigers and the car was also destroyed.

No other groups, Organisation or Individuals can claim this death. Serious action will be taken against those who claim the above other than Tigers in Ceylon or Abroad.

We are not responsible for Past robberies of any kind.

Secretary
CENTRAL COMMITTEE

T.U.L.F - Tamil United Liberation Front.
U.N.P. - United National Party
S.L.F.P. - Sri Lanka Freedom Party.
K.K.S. - Kankesanturai.
V.V.T. - Valvettiturai.
C.I.D. - Criminal Investigation Department.
M.P. - Member of Parliament.

*Tigers claim their armed actions*

மட்டும் சட்டத்தைப் பயன்படுத்தி வேலை நீக்கம் செய்தது செல்லாது என பிறிவி கவுன்சில் அளித்த தீர்ப்பையடுத்து உண்மையில் தனது இறைமையில் தலையிடும் அதிகாரம் பிரித்தானியாவுக்கு உண்டு என்பதை உணர்ந்தது. இதற்கு மாற்றுவழி பிரித்தானிய அரசின் தலைமையிலிருந்து விலகுவதே என முடிவெடுத்த சிங்கள அரசு தமிழர்கள் பங்கேற்காத நிலையில் நவரங்கலாவில் கூடி தமது அரசியலமைப்பை உருவாக்கிக்கொண்டனர். இவ்வாறு ஒரு அரசியலமைப்பு உருவாகுவதற்கு சோல்பரி யாப்பில் 29 வது ஷரத்து தடையாக உள்ளது. ஏனெனில் இந்த 29வது உபவிதியின்படி சிறுபான்மையினத்திற்கு எதிரான ஒன்றை இலங்கைப் பாராளுமன்றம் இயற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை.

எனவேதான் 1972முதல் தமிழ்த் தேசிய இனம் நாடற்ற இனமாக்கப்பட்டது என்பர். 1972 இன் அரசியலமைப்புக்கெதிராக அகிம்சைவழி எதிர்ப்புகள், மக்கள் எதிர்ப்புகள், பாராளுமன்றப் பகிஷ்காரிப்புப் போன்ற ஜனநாயக எதிர்ப்புகள் எத்தனையோ வழிகளில் தமிழர்களால் வெளிப்படுத்தப் பட்டும் எதுவித உருப்படியான தீர்வும் கிடைக்கவில்லை.

1976 இல் தந்தை செல்வநாயகம் தலைமையில் கூடிய தமிழர் கூட்டணி தனது பெயரைத் தமிழர் விடுதலைக்கூட்டணியென மாற்றிக்கொண்டதுடன் "தமிழீழம்" தான் தீர்வு என பிரகடனப்படுத்தியது. இதையடுத்து 1977 தேர்தல் மூலம் தமிழ்மக்கள் "தமிழீழம்" தான் இறுதித்தீர்வு என்பதற்கு தமது ஏகோபித்த ஆதரவை வெளிப்படுத்தினர். தமிழீழம் தான் தமது பாதையெனக்கூறி பாராளுமன்றம் சென்ற தமிழ் எம். பிக்கள் இதனை அடை வதற்கான எவ்வித முயற்சிகளையும் எடுக் காது தமது சுயலாபங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டனர்.

இதனால் 1972 இல் (அரசியல் சாசன எதிர்ப்புடன்) தமிழ்த் தேசிய இனத்தின் பாதுகாப்புக்காகவும் மண் மீட்புக்காகவும் உருவான புதிய தமிழ்ப் புலிகள் படிப்படியாக போர்க்குணமுள்ள தமிழ்த் தேசிய இயக்கமாக உருவாகத்தொடங்கினர். சிங்கள ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து தமிழிளைஞர்களைக் காட்டிக்கொடுத்த திருநெல்வேலி கிராம சபைத்தலைவர், யாழ்ப்பாண மேயர் போன்ற இனத் துரோகிகளை அழிக்கும் வரலாற் றுக்கடமையை இவ்விளைஞர்கள் நிறை வேற்றினர். இதற்கிடை சிவகுமாரன் என்னும் வீரத் தமிழிளைஞன் ஆயுதப்போராட்டத்தின் முக்கியத்துவத்தினைத் தனது வாழ்வால் வெளிப்படுத்தினான். 1974 இல் சிவகுமாரன் தன்னுயிரைத் தானே மாய்த்து திரண்டெழுந்த இளைஞர் சக்திக்கு புத்தூக்கமளித்தான்.

சிவகுமாரனின் மறைவு, ஒழுங்காகத் திட்டமிட்ட அமைப்பொன்று சரியான தலைமையின் கீழ் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தைத் தமிழ் மக்களுக்கு உணர்த்தியது. இதனடிப்படையில் வரலாற்றால் உருவாக்கப்பட்டு தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் தலைமையில் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கம் வழி நடத்தப்பட்டுவருகின்றது. 1978 இல் சி.ஐ.டி பஸ்தியாம்பிள்ளை குழுவினரின் அழிவுக்குப்

www.tamilarangam.net



பஸ்தியாம்பிள்ளை குழுவினரின் அழிவுக்குப் பொறுப்பேற்றதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை உலகுக்கு வெளிப்படுத்தினர்.

எனவே, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமானது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கீழ் சரியான பாதையில் வடிவெடுத்தது. அன்றுமுதல் இன்றுவரை தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழ மக்களின் இறைமையைக் கட்டிக்காக்கும் தமிழீழ மக்களின் அரசாகவும், தமிழீழ மண்மீட்புப் போரினை நடாத்தும் சக்தி மிகு இராணுவ அமைப்பாகவும் திகழ்கின்றனர். இலங்கை இராணுவத்தை மட்டுமல்லாது இந்தியாவின் பலம்பொருந்திய இராணுவத்திற்கும் அசைந்துகொடுக்காது புறங்காணவைத்து இன்றைய உலகின் விடுதலைப்போராட்ட இயக்கங்களில் முதன்மையானவர்களாகத் திகழும் தமிழீழ விடுதலைப்புலிகள் சிங்கள அரசின் இறைமையை 1978 முதல் தமிழீழ மண்ணில் செயற்படவிடாது தடுத்து "தமிழீழஅரசை" மறுக்கப்படமுடியாத அரசாக (Defecto Government) ஆக உருமாற்றம் செய்துள்ளனர்.

இம் மறுக்கப்படமுடியாத தமிழீழ அரசு ஒரு முழுமையான அரசாக மாறுவதிலேயே தமிழீழத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

## போர்ப்பாட்டு

கும்மிருட்டு

கோடறுத்து வீழும்
அதிகார மின்வெட்டு

கோவில் மணி
தூர அடித்துச்
சிதறியது

அது
வீழ்ந்த குலத்தின்
விடுதலைப் போர்ப்பாட்டு






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்றும் இன்றும்



அன்று.........,
இதே தெருக்கள்
இதே புழுதி ஒழுங்கைகள்
மரண பயம் மூடி
மௌனமாய் உறைந்து கிடக்கும்.
அந்தச் சந்திகளில்
ஆள் அரவம் அருகி
தெருநாய்கள் மட்டும்
தமக்குள் ஏதோ
சர்ச்சைக்குப் பின் ஓயும்.

இராணுவ வாகனத் தொடர்கள் - ஒரு
இராஜ ஊர்வலம் போகும்.
தேடுதல்கள்
கைதுகள்
சித்திரவதைகள்.....
புரியாத மொழியும்
எக்காளச் சிரிப்பொலியும்
திரும்பத் திரும்ப
செவிப்பறைகளில்
திராவகம் வார்க்கும்.
கிடுகு வேலிகளைக் கிழித்து
கனரக வாகனங்கள் கடக்கும்.

சப்பாத்துக் கால்களின் சன்னதத்தில்
சங்காரம் நிகழும்.
ஆங்காங்கே.......
தாலியைத் தொலைத்த
தலைவி(தி)கள்
கண்ணீரையும் கைகளையும்
ஆண்டியாக்கிய சோதரிகள்.

இன்று.......
என் தேசமெங்கிலும்
சுதந்திரச் சிலிர்ப்பு.
மண் - பழையது
தெருக்கள் - பழையது
ஆனால்
இராணுவம்- புதியது.
எங்கட பிள்ளைகள்
எங்களின் தேசிய இராணுவம்.
கம்பீரமாய் - அந்தச்
சீருடைச் செல்வங்கள்.
தூளி போடுமென்ற கைகளில்
துவக்குகள்
களம் விரையும் காட்டாறுகளோடு - என்
உள்ளம் மட்டும் ஓட்டிச் செல்லும்.

உணர்வுகளில் நரை விழமுன்
வந்து விட்ட முதுமைக்காய்
வருத்தப்படுகின்றேன்
இளமையில் போராடாது - இப்போ
போராடுவதற்காய் இளமையை
எண்ணுகின்றேன்.

அன்று......
மூத்தவன் - சொல்லாமல் போனான்
இன்று.........
சின்னவன் - சொல்லி விட்டே போகிறான்
என்னால்
தடுக்க முடியாது
இல்லை
தடுக்கவும் மாட்டேன்
அது அவனது
தேசியக்கடமை.

—சிவதாஸ்

www.tamilarangam.net



# உறுதி கொண்ட நெஞ்சினாய்..

புதுவருடப்பிறப்புத்தினமான 14.04.91 அன்று காலை 11 மணி. யாழ்ப்பாணத்திலுள்ள மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தொடர்பகத்தில் ஒரு இளைஞன் விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கிறான். மனதிலுள்ள சுமைகளை இறக்குவதற்கு கண்ணீர்தான் ஒரே வழி என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்த அவனது நண்பர்கள் அவன் அழுது முடியட்டும் என்று காத்திருக்கின்றனர். அவனைச் சூழவும் பலர் கண் கலங்கியபடி நிற்கின்றனர். "ஏன் அழுகிறான் ஷெல்டன்" என்று கேட்கிறான் ஒரு போராளி. "போனவருடப்பிறப்புக்கு அம்பாறையில் சைக்கிள் ஓட்டம் ஓடிப் பரிசு எடுத்தவன் இவன் அதை நினைச்சுட்டான். அதுதான் தாங்கமுடியாமல் அழுகிறான்." என்று பதில் கொடுக்கிறான் இன்னொரு போராளி. புதினம் பார்க்கும் தன்மை இல்லாமல் என்ன விசயம்? ஏன் அந்தப் போராளி அழுதுகொண்டிருக்கிறான்? என்பதை அறிய சுற்றிநிற்பவர்களை விலத்திக்கொண்டு என்னை நுழைத்தேன் அங்கே.......... இரு கண்களையும் இழந்த...... முழங்கைக்குக்கீழே மணிக்கட்டுடன் இரு கைகளையும் இழந்த...... ஒரு பக்க நெஞ்செல்லாம் காயங்கள் ஏற்பட்டதற்கான அடையாளங்களைக் கொண்ட அவனைக் கண்டேன். போராட்டக்களத்தில் தம்மை ஆகுதியாக்கிக் கொள்பவர்கள் அந்தக் கணத்தில் வேதனைகளை அனுபவிப்பதுண்டு. சிலர் மரணம் வருகின்றது என்பதையே தெரியாமல் மரணிப்பதுண்டு. ஆனால் இம்மாதிரியான நிலையில் உள்ளவர்கள்........? இதைப்போல் எத்தனை போராளிகள் தான் அங்கங்களை இழந்து...... ஆனாலும் அவர்களிலிருந்து இவன் வேறுபட்டவனாக.......போராட்டத்தின் இன்னொருபக்கத்தின் சுமை நெஞ்சில் கனத்தது. இன்றைய மனோநிலை அந்தப்போராளியுடன் உரையாடுவதற்கு உகந்ததல்ல எனக் கருதிக்கொண்டேன். கண்ணின் முக்கியத்துவம், கையின் அவசியம் எல்லாவற்றையும் சிந்தித்தபடியே "நான் இன்னொருநாள் வருகிறேன்" என்று தொடர்பகப்பொறுப்பாளர் மோகனிடம் விடைபெற்றுக்கொண்டேன்.

22.04.91 அன்று மீண்டும் தொடர்பகத்துக்குச் சென்றேன். மோகனிடம் தனியாகச் சில விபரங்களைக் கேட்டேன். நிந்தவூரைச் சேர்ந்த இந்தப் போராளி அம்பாறை மாவட்டத்தில் கண்ணிவெடிகளை வைக்கும் குழுவுக்குப் பொறுப்பாக இருந்தவன். ஒரு நாள் மிதிவெடிவைக்கும்போது அதுவெடித்து இருகைகளையும் கண்களையும் இழந்துவிட்டான். அம்பாறையிலிருந்து மிகச் சிரமத்தின் மத்தியில் இவனைக் கொண்டுவந்தார்கள் என்றார். "இங்கே இப்போது எப்படி நடந்துகொள்ளுகிறான் ஷெல்டன்?" என்று கேட்டேன். "ஒவ்வொரு பொருளும் இருக்கும் இடத்தை அடைவதற்கு எத்தனை அடிகள் வைக்கவேண்டும் என்ற அளவுக்கு இந்த இடத்திற்கு பரிச்சயமாகிவிட்டான். மற்ற விஷயங்களை நீங்கள் நேரில் கேட்கலாமே!" என்றார். ஷெல்டன் இருந்த அறையை நோக்கிப்போனோம்.



ஷெல்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரும்பறவை

"வாழும் நாளில் எங்கள் தோழர் வாழ்ந்த வாழ்வை நினைக்கின்றோம்......" என்ற தேனிசை செல்லப்பாவின் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. பழைய நினைவுகளில் மூழ்கிக்கிடந்தான் ஷெல்டன். வெளியே அவனை அழைத்துவந்தார் மோகன். நட்புறவுடன் உரையாடல் ஆரம்பித்தது. குடும்ப விபரங்கள் போன்றவற்றை பரஸ்பரம் விசாரித்துக்கொண்டோம். கதை கூடக் கூட நெருக்கம் அதிகரித்தது. அதனால் "ஒரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்லுவீர்களா?" என்றான் ஷெல்டன். "கேளேன் பார்ப்பம்" என்றேன். "TVக்கு நடுவிலே இருக்கிற தென்ன?" என்று கேட்டான். "இதென்ன பெரிய கேள்வி! திரை என்றேன்" இல்லை என்று கூறிய அவன் தொடர்ந்து நான் கூறிய ஒவ்வொரு பதிலையும் நிராகரித்தான். "சறண்டர் பண்ணீட்டன் நீ சொல்லு" என்றேன். "ஒவ்வொரு எழுத்தாய்ச் சொல்லிக்கொண்டு போங்கோ. S, T, U, V எண்டு போகுமெல்லா. அப்படியெண்டால் T,Vக்கு நடுவில் உள்ளது U தான் என்றான். அசடுவழியச் சிரித்தேன். இது

நல்லதருணம் எனக்கருதி. இவன் கண்க ளையும், கைகளையும் இழக்கக் காரணமா யிருந்த சம்பவத்தை விசாரித்தேன். "வக்கும்பிட்டியா, மாந்தோட்டம், தோணிக்கல், தாராமலை, தங்கவேலாயுதபுரம் எல்லா இடமும் ஆமி வந்திட்டான். எல்லா மைன்ஸும் எடுத்துக் கொண்டம். ஒவ்வொண்டா வைச்சுக்கொண்டேவந்தம். கடைசி மைன்ஸ்.....சண்டை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. நாம தப்புவம் எண்டு நினைக்கல்ல. இது தான் வாழ்க்கையில நான் வைக்கிற கடைசி மைன்ஸ் எண்டு சொல்லிக் கொண்டு டிற்றனேற்றரை (detonator) சரிபண்ணினன். வெடிச்சிற்றுது." .....கொஞ்சநேர மௌனத்திற்குப் பின் தானே தொடர்ந்தான். "ரெண்டு கைதான் இல்லாமற்போச்சு ஒரு கண்ணாவது இருந்திருக்கலாமே........நான் வாழ்ந்து என்ன செய்ய? தற்கொலை செய்யலாமே எண்டு யோசிச்சன், அதுக்கும் நிறையச்சந்தர்ப் பங்கள் கிடைச்சுது. சண்டை நடக்கிறபோது என்னைக் கழுத்தளவு தண்ணீருக்குள்ளால தூக்கிக்கொண்டு வந்தாங்க நம்மட பொடியனுகள். கண்தான் தொரியாட்டாலும் என்னாலை இதை உணர முடிஞ்சுது. அப்பகூட சரிஞ்சுவிழுந்து செத்திருக்கலாம்.

என்னைக் காப்பாத்தப்போய் நம்மட பொடியனுகள் வீணாய்ச் சாகிறதை நான் விரும்பேல்ல, ஆனா காயப்படுகிற பொடியன் ஒருத்தரையும் குப்பியடிக்க விடக்கூடாது எப்படியாவது காப்பாத்தி என்னட்டக் கொண்டு வாங்கோ எண்டு தலைவர் கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறார் எண்டதால தலைவருடைய உத்தரவுக்கு மாறான விசயத்தைச் செய்ய என்னால முடியல்ல" ஷெல்டனின் வார்த்தைகள் இனம் புரியாத உணர்வை ஏற்படுத்தின. இயக்கத்தின் தலைவரில் அந்தப் பையனுக்குள்ள விசுவாசம்.....இது புலிகளுக்கே உரிய குணமாகும். இது கருணாவின் வளர்ப்பு முறையின் வெற்றியென உணர்ந்து கொண்டேன்.

"இதுக்குப்பிறகு நீ உன்ர குடும்பத்தைச் சந்திக்கேல்லையா?" என்று கேட்டேன். "அவங்க எல்லாம் காரைதீவு அகதி முகாமில் இருக்கிறாங்கள் எனக்குச் சின்னக் காயம் என்றுதான் தெரியும். அதுக்கே அழுதாங் களாம் என்று கேள்விப்பட்டன்." என்று கூறிவிட்டு மௌனமானான். அவனது மனநிலையை உணர்ந்த நான் பேசாமல் இருந்தேன். வழிந்துகொண்டிருந்த கண் ணீரை மிஞ்சியிருந்த கையால் துடைத்து விட்டு மீண்டும் தொடர்ந்தான் "என்ரை மாமா என்னை பார்த்திட்டுப் போனவர் அம்மாட தம்பி, அவருக்குப் பேர் மகேந்திரன்-அவரும்

> "என்னைக் காப்பாத்தப்போய் நம்மட பொடியனுகள் வீணாய்ச் சாகி றதை நான் விரும்பேல்ல, ஆனா காயப் படுகிற பொடியன் ஒருத்தரையும் குப்பி யடிக்க விடக்கூடாது எப்படியாவது காப்பாத்தி என்னட்டக் கொண்டு வாங்கோ எண்டு தலைவர் கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறார் எண்டதால தலைவருடைய உத்தரவுக்கு மாறான விச யத்தைச் செய்ய என்னால முடியல்ல"

இயக்கந்தான்- என்றான். கொஞ்சநேர அமைதிக்குப்பின் மீண்டும் உரையாடல் தொடர்ந்தது "அம்பாறையிலிருந்து இங்க வந்ததைப் பற்றி சொல்லன்" என்றேன். "என்னைக் கொண்டு வாறப்போ நாலு இடத்தில றவுண்டப். மழையும் கஷ்டப்படுத் திட்டுது. கொண்டுவந்த பொடியனுகளில ஒருத்தன் செத்துப்போயிட்டான். உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டியது நம்மட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீரர்கள்

முறிந்த நிழல்கள்
நடந்துசென்றன
தணிந்த குரலில்
தடங்கித்தடங்கி
ஏதோ ஒலித்தன

இலை உதிர்ந்த மரங்கள்
நிழல் கொடுத்தன
தணல் அவிந்த நெருப்பு
சூடு ஏற்றின

குனிந்த தலைகள்
நிமிரவில்லை
தணிந்த குரல்கள்
நிசப்தமாயின

கனிந்த பழங்கள்
கிடைக்கவில்லை
சிரித்துமகிழ
இது நேரமுமில்லை

நீண்ட வழிகள்
முன்னேயில்லை
குச்சு ஒழுங்கைகள்
கை முடுக்குகள்
பனை மரங்கள்
பாலைக்காடுகள்
நெருஞ்சி முள்ளிகள்

நாகதாளிகள்
நிறையக் கிடந்தன

தவழ்ந்தும் கிடந்தும்
உருண்டும் சென்றனர்
உன்னத உலகைக் காணத்
துடித்தவர்

என். கே. மகாலிங்கம்

பொறுப்பு எண்டு அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்ததால நானும் ஒண்டும் பேசல்ல. எப்பிடியோ மழைக்கும் ஆமிக்குமிடையால வந்துசேந்திட்டன். காலில சின்ன முறிவு. அதுவும் இப்ப சரிவந்திட்டுது. " என்றான்.

"இப்ப என்னமாதிரிப் பொழுது போகுது?" என்று கேட்டேன். "வாறவங்க எல்லோருமே என்னோட வந்து கதைச்சிட்டுத்தான் போவாங்க. செல்லப்பா பாட்டுக்களை கேட்டுக்கொண்டிருப்பேன். நான் தலைவரைக் கேட்டு அரசியல் படிக்கப்போறன். " என்றான். எனக்கு அவனது தன்னம்பிக்கை வியப்பூட்டியது. பின்பும் அவனே தொடர்ந்தான். "நான் மூண்டாம் வகுப்புத்தான் படிச்சனான். அது தான் யோசிக்கிறன்" என்றான். "இதில என்ன யோசிக்கக்கிடக்குது?" என்று கூறிய நான், நானறிந்த சில சாதனையாளர்களைப்பற்றிக் குறிப்பிட்டு அவர்களெல்லாம் இம்மாதிரியான சூழ்நிலையில் தான் சாதனை செய்தனர் என்பதையெல்லாம் குறிப்பிட்டேன். கால் சரியில்லாத நிலையில் ஆமிக்குமரன் ஆனந்தன் செய்த சாதனைகளைப்பற்றி திரும்பத் திரும்ப விசாரித்தான். தான் அரசியல் படிக்கமுடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு வலுப்பெறலாயிற்று.

"அடுத்தமுறை நீங்க வாறபோது நான் கேள்விகள் கேட்பேன். நீங்கள் தயாரா வாருங்கோ!" என்றான். "நீ வேறு யாரிடமிருந்தாவது கேக்கிறதை மற்றப் பெடியங்களுக்குப் படிப்பிக்கலாம். இதெல்லாம் போராட்டத்தில் ஒரு பங்களிப்புத்தான். உனக்கு வாயும் காதும் இருக்கு அதை மறந்திடாதே. " என்று தைரியமூட்டினேன். பின் அவனிடமிருந்து விடைபெற்றேன்.

போராட்டத்தில் நாங்கள் படிக்க வேண்டியது இன்னும் நிறைய உண்டு. இம்மாதிரியான சூழ்நிலையிலும் நான் படிப்பேன் படிப்பேன் என்று தைரியத்துடனிருக்கும் இப்போராளிக்கு முன்னால் நாங்கள் கற்றுக்குட்டிகள். இப்படி எத்தனை போராளிகள்? உயிரின் இறுதிமூச்சுவரை தம்மால் இயன்றவரை எந்தெந்த வழிகளில் போராட்டத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துப் போராட முடியுமோ அந்தந்த வழிகளில் போராடிவரும் இந்தப்போராளிகளால் தான் போராட்டம் வலுப்பெற்று ஆத்மபலம் பெறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராட்டமும் தமிழ்மொழி மேம்பாடும்

ஒரு சிறுபான்மை இனமானது பெரும்பான்மை இனமொன்றின் திட்டமிட்ட ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்படும்போது தனது இழந்துபட்ட உரிமைகளை மீள நிலைநாட்டி; தனது மொழியையும் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாக்கும் நோக்கோடு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கிறது. தேசிய விடுதலைப் போராட்டமோ இந்நோக்கைச் செயற்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது தனது இனத்தின் அத்திவாரமாக விளங்கும் மொழி,

## ஆதவன்

கல்வி, பண்பாடு, பொருளாதார வாழ்வு ஆகிய காரணிகளை புரட்சிகர மாற்றங்களுக்கும் உட்படுத்துகிறது. இவ்வகையில் சமுகத்தினுட் காணப்படும் பிற்போக்குவாத அடக்குமுறைகளின் தகர்ப்பும், கல்விமுறையில் புதிய விழிப்புணர்வும், புதிய பொருளாதார முறைகளுக்கான தேடலும் நிறைந்ததாகப் போராட்டம் அமைவதைக் குறிப்பிடலாம். இத்தகைய தேசிய விடுதலைப் போராட்டங்களில் தமிழீழ விடுதலைப்போராட்டம் வரலாற்று ஆய்வாளர்களால் குறிப்பிட்டுக்காட்டப்படும் ஒன்றாக அமைந்து நிற்கும் என்பது திண்ணம். இக் கட்டுரையில் தமிழ் மொழியின் மீதான இருவேறுபட்ட தாக்குதல்கள் பற்றியும், தமிழின் மேம்பாட்டுக்கு தமிழீழ விடுதலைப்போராட்டம் எவ்வகையில் வழிகோலி வருகிறதென்பதையும் மேலோட்டமாக நோக்குவோம்.

தமிழீழப்பிரதேசத்தில் தமிழ் மொழி மீதான வேற்று மொழிகளின் பாதகமான தாக்கத்தையும் சிங்கள இனவாதத்தின் தாக்கத்தையும் இரு வேறு தாக்குதல் முனைகளாகக் கொள்ளலாம்.

பொதுவாக ஒரு மொழியானது இவ்வாறான தாக்குதல்களுக்கு உட்படுத்தப்படும்போது தனது தனித்துவத்தை இழந்து, மூலமொழியிலிருந்து வேறுபட்டுவிடும் நிலையோ அல்லது படிப்படியாக அழிந்துபோகும் நிலையோ ஏற்பட்டுவிடும். இதற்கு உலக வரலாற்றில் பல உதாரணங்களுண்டு. மாறாக இத்தகைய நிலையினை உணர்ந்துகொண்டு விழிப்போடு செயற்பட்டு போராட்டத்தின் மூலமாக தமது பண்பாட்டையும் மொழியையும் மேல்நிலைக்கு இட்டுச்சென்றதான வரலாறுகளும் ஏராளம்.

மாற்றங்களுக்கூடாகத்தான் ஒரு மொழி வளர்ச்சிகாண்கிறது. தமிழின் உரை நடை வளர்ச்சியிலும் இலக்கிய வளர்ச்சியிலும் பிறமொழி கற்ற தமிழறிஞர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர். நிறுத்தக் குறிகளின் அறிமுகம், அச்சுக்கலையின் அறிமுகம் போன்றவையும் ஐரோப்பிய மொழிகளைக் கற்றிருந்த தமிழர்களாலும், தமிழைக் கற்ற ஐரோப்பியர்களாலும் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டவையே. இவ்வாறாக தேவையானவற்றை பிற இடங்களிலிருந்து அறிமுகப்படுத்துவது மொழியின் வளர்ச்சிக்குத் துணை புரிவதாகும்.

ஆனால், பிறமொழித் தாக்கத்தின் இன்னொரு பக்கம் பாதகமாகவும் இருக்கிறது. ஏற்கனவே இலகுவான, தெளிவான சொற்கள் வழக்கிலிருகக்கூடியதாக தமிழில் தேவையற்றமுறையில் பிறமொழிச் சொற்களைக் கலந்துவிடுவதை வளர்ச்சியாகக் கொள்ள முடியாது. தமிழில் எழுத்து நடையிலும் பேச்சுநடையிலும் பாரிய அளவில் வடமொழிச் (சமஸ்கிருத) சொற்கள் வழக்கிலுள்ளன. எமக்குத் தெரியாமலே இன்று நாம் பல வடசொற்களை பயன்படுத்திவருகிறோம். தற்காலத்தில் ஆங்கில மொழிச்சொற்களை பேச்சுத்தமிழில் கலந்துபேசுவது ஒரு "நாகரிகமான, கௌரவமான" பழக்கம் என்று கருதிச்செயற்படுவோர் பலர் எம்மிடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




உள்ளனர். எளிமையான, தெளிவான தமிழ்ச்சொற்கள் இருக்கும்போதும் தமிழோடு ஆங்கிலச்சொற்களை கலந்து கதைப்பதை இவர்கள் வழக்கமாக்கிக் கொண்டுவிட்டனர். "நன்றி" என்பதைத் தமிழில் சொல்வதற்குக் கூச்சப்படும் நிலையில் தான் இன்று தமிழர்களில் பலர் இருக்கிறார்கள் என்பது வேதனையான உண்மையாகும். பல நூற்றாண்டுகால வடமொழிக்கலப்பும் தற்போதைய ஆங்கிலக்கலப்பும் சேர்ந்து பேச்சுத் தமிழையும், எழுத்துத்தமிழையும் நலிவுபடுத்துகின்றன. வடசொற்கள் இன்று வழக்கிலுள்ளது போலவே காலப்போக்கில் ஆங்கிலச் சொற்களும் இயல்பாகவே வழக்கிற்கு வந்துவிடும் நிலை தோன்றிவிடும். மொாழி மீதான ஆங்கிலச் சொற்களின் தாக்கம் ஏற்கனவே தமிழகத்தில் பரவியுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

தமிழ்நாட்டில் தமிழ்வேந்தராட்சி நலிவுறத் தொடங்குமுன்னரே வடமொழிச் சமய இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர்களூடாக வடமொழிச் சொற்கள் தமிழினுள் ஊடுருவத்தொடங்கிவிட்டன. தமிழில் தாம் தெரிவிக்கவேண்டியதைத் தெரிவிப்பதற்கான சொற்கள் தாராளமாக இருந்தபோதும் வடமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட இலக்கியங்களின் ஆசிரியர்கள் இச்சொற்களைப் பயன்படுத்தாது வடமொழிச்சொற்களைப் புகுத்தத் தொடங்கினர் என்பதை மொழி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்து சமயம் தமிழர்களிடையே வேரூன்றத் தொடங்கியதும் பேச்சுவழக்கில் இத்தகைய தாக்கம் அதிகரித்தது. தமிழராட்சி வீழ்ச்சியுற்றமையும் இத்தகைய தாக்கத்தின் தொடர்விற்கு ஏதுவாக அமைந்தது. தமிழ் மொழியிலிருந்து தோன்றிய கிளைமொழிகள் இன்று தனி மொழிகளாகி தமிழிலிருந்து வேறுபடுத்திப்பார்க்கப்படும் மொழிகளாகிவிட்டன.

தமிழ்மொழியின் மீதான வடமொழியின இந்தத் தாக்கம் பாரதூரமானதாக இருந்தபோதிலும் தமிழ் மொழியின் அடிப்படையைத் தகர்த்துவிடக்கூடிய தொன்றாக அமையவில்லை. ஏனெனில் வடமொழிச் சொற்களின் துணையின்றி தமிழில் கருத்துக்களை அனைவருக்கும் விளங்கும் வண்ணம் எளிமையாக இன்றும் வெளியிடக்கூடியதாகவுள்ளது. தமிழ்த் தூய்மை என்பதைக் கடுந்தமிழ்ப் பிரயோகம் என்றோ பிற (வடமொழி, ஆங்கிலம்) மொழிகள் மீதான வெறுப்புணர்வின் வெளிப்பாடாகவோ புரிந்துகொள்வது தவறு. பிறமொழிச் சொற்களைவிடவும் இலகுவான, எளிமையான தமிழ்ச்சொற்களின் பிரயோகம் தமிழ்நடைக்குக் கொடுக்கும் மேம்பாட்டினையே தமிழ்த்தூய்மைக்கான செயற்பாடுகள் குறித்து நிற்கின்றன.

தேவையற்ற வடசொற்கலப்பினையும் ஆங்கிலக்கலப்பினையும் நீக்கி இயன்றளவிற்கு தமிழ்ச்சொற்களை பயன்படுத்துவதென்பது திடீரென சாதிக்கப்படக்கூடிய





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒன்றல்ல. தமிழீழத்தில் ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட மொழி உரிமைப்பறிப்பு (தனிச் சிங்களச் சட்டம் -1956), தமிழ் மக்கள் மீது சிங்கள மொழியை திணிக்கமுற்பட்டமை, தமிழரின் பாரம்பரியத் தாயகத்தில் சிங்களக்குடியேற்றத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை, மற்றும் மொழிச் சின்னங்களை நாசம் செய்யும் இனவாதத்தின் வெளிப்பாடுகள் போன்ற நிகழ்வுகள் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு நேரடியான தடையினை ஏற்படுத்தும் மற்றைய தாக்குதல் முனையாகும்.

மேற்கண்டவாறு இரு முனைகளில் தாக்குதலுக்குள்ளான தமிழ் மொழியின் துன்பியல்வரலாற்றின் திருப்புமுனையாக தமிழீழ விடுதலைப்போராட்டம் அமைகின்றது. எளிமையான தூய தமிழ்ப் பிரயோகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் கவனம் செலுத்திவருகின்றது. விடுதலைப் புலிகள் கலை கலாச்சாரப்பிரிவு என்ற பெயரில் இயங்கிவந்த இப் பிரிவு தூயதமிழில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் என்று தனது பெயரை மாற்றியமைத்துக்கொண்டு தமிழீழத்தில் தமிழின் மேம்பாட்டிற்கான எண்ணங்களை மக்களிடை பரப்புவதில் கவனஞ்செலுத்தி வருகிறது.

கடந்த வருடம் ஆனி மாதம் தமிழீழத்தில் முத்தமிழ் விழா நடாத்தப்பட்டது. தமிழீழக் கலைஞர்கள் அனைவரையும் ஒன்று திரட்டிய இவ்விழா தமிழின் முப்பிரிவுகளான இயல், இசை, நாடகம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிவு பிரிவாக நடாத்தப்பட்டது. விழாவில் தமிழீழத்தின் பலநூறு கலைஞர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் கலந்துகொண்ட அரங்குகள் இடம்பெற்றன. கவியரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவுகள், இசைநிகழ்ச்சிகள், வாத்திய இசை, நடனம், நாட்டிய நாடகம், பாரம்பரிய கருததுக்கள், நவீன நாடகங்கள் என்ற பல நிகழ்வுகளை விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் ஒழுங்குசெய்திருந்தது. விழாவில் தலைவர் பிரபாகரன் அவர்களால் "தமிழீழத் தேசிய விருது" பல துறைகளில் அளப்பரிய சேவையாற்றியவர்களில் எண்மருக்கு வழங்கப்பட்டது. இவர்களில் மூவர் இலக்கியப் பணிக்காகவும், நாடகத்துறைக்காகவும், பத்திரிகைத்துறைக்காகவும் தமிழீழத் தேசிய விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்ட மாமனிதர்கள் ஆவர். இன்னும் விடுதலைப்போரிற்கு ஆற்றிய பங்கிற்காகவும், மக்களுக்கு ஆற்றிய பணிகளுக்காகவும், தமிழீழத்தின் அரும் பொருள் தொல்பொருள் பாதுகாப்பிற்காகவும் தமிழீழத் தேசிய விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழர் தேசியம் பிரகடனப் படுத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழில் இதுவரை தெளிவான முறையில் கருத்துக்கள் வரையறுக்கப்படாத சொற்களை வரையறை செய்யும் பணியும் தமிழீழத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இராணுவச் சொற்பதங்களின் சரியான பிரயோகத்தைப் பற்றிய கருத்துக்கள் வரையறுக்கப்பட்டமையை இங்கு குறிப்பிடலாம். பிறமொழிச்சொற்களைக் களைந்து பேச்சிலும் எழுத்திலும் சரியான முறையில் தூய தமிழ்ச்சொற்களின் பிரயோகத்தைக் கொண்டுவரும் படிமுறையான மாற்றத்திற்குத் தமிழீழம் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதையே மேற்குறித்த நிகழ்வுகள் குறித்து நிற்கின்றன. எந்தவொரு ஆதிக்கத்திற்கும் உட் படாத சுதந்திர அரசாக, முதலாவது சுதந்திரத் தமிழ் தேசமாக தமிழீழம் தன்னை உலக வரைபடத்திற் குறித்துக் கொள்ளும் போது தமிழ் வரலாற்றில் நீண்ட இடைவெளியின் பின் தமிழின் மேம்பாட்டுக்கான பொறுப்பையும் வரித்துக்கொள்ளும்.

வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களும் தாயகத்தின் நிகழ்வுகளோடு உணர்வுகளால் ஒன்றுபட வேண்டும். உலகின் அனைத்துப் பாகங்களிலும் பிறமொழி ஆதிக்கத்திலிருந்து தமது மொழியின் தூய்மையைப் பேணுவதற்காக அவ்வந்நாடுகளின் அரசுகள் மேற்கொண்டுள்ள முயற்சிகளை உலகு பூராவும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர் நன்கு அறிவர். கடந்த சில நூற்றாண்டுகளுக்குள் இலக்கணம் வகுக்கப்பட்ட மொழிகள் இலக்கியச் செழுமைமிக்க மொழிகளாக இன்று விளங்குவதை நாம் காண்கிறோம். இம்மொழிகளைப் பேசுவோரும் பிறமொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கும் போதும் பிறமொழிச்சொற்களைத் தமது மொழியில் கலந்து மாசுபடுத்தாமல் அவ்வம்மொழிகளின் தூய்மை குன்றாது பயன்படுத்தி வருகின்றதைக் காண்கிறோம். வெளிநாடுகளில் தாய்மொழியைத் தொலைத்துவிட்ட இனமாக மாறிவிடும் இழிநிலையைத் தவிர்த்து செழுமைமிக்க தமிழ்மொழியின் முன்னேற்றத்துக்காக உழைக்கவேண்டியது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# [redacted]

இவர்களை உற்றுநோக்குங்கள்

மண்ணையும் மக்களையும்
இரட்டைப் பின்னலாய்
தலையிற் சுமக்கும்
இவ்வக்கினிக் குஞ்சுகளை
உற்று நோக்குங்கள்

இவர்களின் அநாயாசச் சிரிப்பு
எதனை உணர்த்துகிறது

எமது பதவி பட்டம்
நகை நட்டு சீதனம்
அத்தனையையும் பார்த்து
எள்ளிச் சிரிப்பது போலில்லையா

தம் சிறுகரங்களினால் அழிபடப்போவதை
உணராது எதிர்வரும் எதிரிகளைப் பார்த்து
நகைப்பது போலில்லையா?

நாம் அழிவதுமில்லை அழிக்கப்படுவதுமில்லை
எம்மைக் கத்தி வெட்டாது அஸ்திரம் துளைக்காது
நெருப்பு தீண்டாது காற்று உலர்த்தாது
எனும் உபநிடதக் கூற்றுக்களை
இவர்களது இளமுறுவல் நினைவுபடுத்தவில்லையா

இவர்களை உற்று நோக்குங்கள்

விட்டு விடுதலையாகிய
இப் பாரதிக் குருவிகளை
உற்று நோக்குங்கள்

இமாலயச் சாரலில்
வலம் வரும் ரிஷிகளைவிட
வெலிஓயாக் காட்டினில்
தவம் செய்யும் இவர்கள்
மேலானவர் என்போம்
ஏனெனில் இவர்கள்
சாவினைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பவர்கள்
சுயநலக் கழிவினை காறித் துப்பியவர்கள்
சமத்துவம் சமச்சீர் தமிழர் அனுபவிக்க
சமர்க்களம் புகுந்தவர்கள்

இவர்களை உற்றுநோக்குங்கள்

இப் புதிய துறவிகள் அசைவில்
உலகமே புத்துயிர் பெறுவதை உணர்வீர்கள்

—மு.நேமிநாதன்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள்
நோர்வேக் கிளை

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
Tamil Co-ordinating Committee
P.O.box 4366
Nygaardstangen
5028 Bergen
NORWAY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்